விலை சதம் 20





# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஐப்பசி 9 உ சனி (25-10-69) ஷிஃபான் 13 புத்தகம் 23 இதழ் 50


## இழைக்கப்படும் அநீதிகள் துடைக்கப்படாவிடின்

# யூ.என்.பி. ஆட்சியை வீழ்த்துவோம்!

## தமிழரசுத் தந்தை சங்கற்பம்!

"தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் தமிழ் பேசும் மக்களுக்குப் பல்வேறு துறைகளிலும் காட்டப்படும் பாரபட்சங்களை நிவர்த்தி செய்யும்படியும், தமிழ் பேசும் மக்களுக்கு நீதி வழங்கும்படியும் தமிழரசுக் கட்சித் தூதுக்குழு விரைவில் பிரதமரைச் சந்தித்து வற்புறுத்த இருக்கிறது. நமது நியாயமான இக்கோரிக்கைக்கு அரசாங்கம் செவி சாய்த்து அநீதிகளைத் துடைத்தெறிய முன்வராவிட்டால், அடுத்த பொதுத் தேர்தலின்போது இந்த அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து வீழ்த்துவதற்குத் தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்புடன் தமிழரசுக் கட்சி தனது முழு சக்தியையும் செலவிடும்."

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் சுதந்திரன் நிருபருக்களித்த பேட்டியொன்றின்போது அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்தார்.

அரசாங்கம் கொடுத்த மூன்றுமாண்டு மேலதிக காலக்கெடுவுக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற புதிய தமிழ் ஊழியர்களின் முதுமுறை உரிமையைப் பறிமுதல் செய்யும் திறைசேரியின் 769 வது இலக்க சுற்றறிக்கை சம்பந்தமாகவும், 701 வது திறைச்சேரிச் சுற்றறிக்கைக்கு முரணான முறையில் தமிழ்ப் பகுதியில் கடமை புரியும் சில்வறை ஊழியர்களை, நெசவு ஆசிரியர்கள் போன்றோரைச் சிங்களத் தேர்ச்சியின்மை என்ற காரணம் காட்டி வேலை நீக்கம் செய்யப்படுவது சம்பந்தமாகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளைத் தமிழில் பதியும் உரிமை மறுக்கப்படுவது குறித்தும், இன்னும் இதுபோன்ற அரசாங்கத்தின் ஏனைய பாரபட்ச நடவடிக்கைகள் குறித்தும் தமிழரசுக்கட்சி என்ன நடவடிக்கை எடுக்கஇருக்கிறது என்று கேட்டபோதே திரு. செல்வநாயகம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் எப்பாகத்தில் இருந்தாலும், அங்கள் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளைத் தமிழில் பதிவு செய்வதற்கு உரிமையுடைத்தவர்கள். இந்த உரிமையை அரசாங்கம்மறுப்பது மிகவும் பாரதூரமானது. இது குறித்து உள்நாட்டமைச்சரிடம் பேசினேன். இப் பிரச்சினையில் கொள்கை நிர்ணயம் செய்யும் உரிமை பிரதமரிடம்தான் இருப்பதாக அவர் கூறினார். எனவே பிரதமரிடம் இதுபற்றி எடுத்துக்கூறுவோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சிங்கள மக்கள் தங்கள் பிறப்பு இறப்பு திருமணப்பதிவுகளைச் சிங்களத்தில் எழுதிக்கொள்வதற்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையும், அதற்கென செய்யப்பட்டுள்ள வசதிகளும் போல வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது பதிவுகளை தமிழில் செய்வதற்கும் செய்து தரப்பட வேண்டும்" என்று திரு. செல்வநாயகம் தெரிவித்தார்.

### ஆதரிக்காதது ஏன்?

அரசாங்க சேவைக் கமிஷன் மீது திரு. நவரத்தினம் பா. உ., பாராளுமன்றத்தில் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழரசுக் கட்சி பா. உ. கள் எவரும் ஏன் ஆதரிக்கவில்லை என்று கேட்டபோது திரு. செல்வநாயகம் கூறியதாவது.

"தமது தீர்மானத்தை வழிமொழியும்படியோ ஆதரிக்கும்படியோ திரு. நவரத்தினம் எமது கட்சியையோ கட்சியின் எந்த ஒரு உறுப்பினரையோ கேட்கவுமில்லை. கலந்தாலோசிக்கவுமில்லை.

"திரு. நவரத்தினம் எமது கட்சியுடன் தொடர்பு கொண்டு எமது ஆதரவைக் கோரியிருந்தால் நிச்சயமாக அதை ஆதரித்திருப்போம்."



## 'கோவை'க்கு மிரட்டல்!

'நவரத்தினத்தைக் கண்டபடி தாக்கி எழுதாதே: இந்த எச்சரிக்கையை மீறி நவரத்தினம் கட்சியைத் தாக்கினால், நீ நிம்மதியாக வெளியில் நடமாட முடியாது: தாக்கப்படுவாய்'

நவரத்தினம் கட்சி ஆதரவாளர் ஒருவரிடமிருந்து தொலைபேசி மூலம் 17—10—69 மதியம் 'கோவை'க்கு இப்படி ஒரு மிரட்டல் விடுக்கப்பட்டது.

நவரத்தினம் ஓர் கோழை என்று கடந்த வார சுதந்திரனில் 'கோவை' எழுதியிருந்ததைக் கண்டு கலகலத்துப் போய் தொலைபேசி மூலம் மிரட்டிப்பார்த்த நவரத்தினத்தின் குறித்த ஆதரவாளர் தமது பெயரைக் கூற கோழைத்தனமாக மறுத்து விட்டது குறிப்பிடத்தக்கது: தலைவரைப் போலத் தொண்டர்கள் இருப்பது ஆச்சரியமல்லவே!

(9ம் பக்கம் பார்க்க)

## இராசலிங்கத்தை செனட்டராக்க

# தமிழரசார் எடுத்த முயற்சிக்கு

## ஜீ.ஜீ.யின் கூத்து ஒரு சவாலாயிற்று!

கொழும்பு, செப். 22

மூதவையில் காலியான ஸ்தானங்களில் ஒன்றுக்கு சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக மனித உரிமைகள் இயக்கத் தலைவரும் சென். ஜோசப் கல்லூரி ஆசிரியருமான திரு. த. இராசலிங்கத்தை தெரிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சி எடுத்த முயற்சிகள், தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்தின் கடைசி நேரக் குறுக்கீட்டால் வெற்றிபெறக் கூடிய வாய்ப்புக்கு சவாலாக இருந்தன.

இப் பிரச்சினையில் புகுந்து சிறுபான்மைத் தமிழருக்குத் தாமும் ஏதோ செய்வது போலக் காட்டிக் கொள்ளும் தேர்தல் நோக்குடன் திரு. பொன்னம்பலம் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவுக்கு இதைக் கொண்டு சென்றது தான் திரு. இராசலிங்கத்தின் வெற்றி வாய்ப்புக்கு ஒரு சவாலாக இருந்தது என்று கருதப்படுகிறது.

மூதவையில் சிறுபான்மைத் தமிழர்களின் பிரதி

(9ம் பக்கம் பார்க்க)


உ

சிவமயம்

### திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சௌமிய ஆண்டு ஐப்பசித் திங்கள் 15-ம் திகதி (31—10—69) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி முதல் 8-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன் வடிவேற்கரசனுக்கும் எமது புதல்வி பத்மினிதேவிக்கும்

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கும் அதனையடுத்து 18ம் திகதி (3—11—69) திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் வரவேற்பு உபசார வைபவத்திற்கும் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வி. இராசசேகரமும், துணைவியாரும்,
தொண்டமனாறு.

மூதவை உறுப்பினர் த. நீதிராசாவும், துணைவியாரும்,
9, பம்பலப்பிட்டி டிரைவ்,
கொழும்பு—4


இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

## அத்தியாயம் (8)

குரு—சிஷ்ய பரம்பரைக் கதைகளைப் பற்றி பல நூல்களில் படித்திருக்கின்றான் பிரகாஷ். கண்ணால் பார்த்தது கிடையாது. ஒரு முனிவர் தான் நோயுற்றிருந்த காலை வாந்தி எடுத்ததையும் அதை அவரின் பிரதம சிடன் கரத்திலேந்தி நின்றதையும், அப்போ அந்த குருவானவர் அவனை நோக்கி மனிதனுடைய காலடி பிடிக்காத இடமாகப் பார்த்து அதைப் போடச் சொன்னதும், உடனே அவன் காலடி பிடிக்காத இடம் என்றால் அது என் வயிறாய் தானிருக்கும் என்று தானே குடித்ததையும் கதையாக, சரித்திரமாகப் படித்திருந்தான்.

ஆனால் ஓர் நாகரீக யுவதி, என்னதான் மாணவியாக, காதலியாக இருந்தாலும் தான் வாந்தி எடுத்தபோது கைநீட்டி அவற்றை ஏந்திய அந்தக் காட்சியைக் கண்டபோது பதறிவிட்டான். அவனுள்ளத்தில் கீதா மீது வைத்த மதிப்பும், அன்பும் மேலும் மேலும் உயர்ந்து கொண்டுவிட்டன.

'சுகுணா அவளுக்கு...' என்றான்.

உடனே தேனீர்த்தட்டை மேசைமீது வைத்துவிட்டு கீதாவின் பின்னே ஓடினாள் சுகுணா. பாத்ரூமிற்கு அழைத்துச் சென்று சோப் தண்ணீர் முதலியன கொடுத்து உதவினாள்.

கைகளை நன்கு கழுவிவிட்டு அறைக்கு வந்த கீதாஞ்சலியைப் பின் தொடர்ந்து வந்தாள் சுகுணா. அவளுடைய மனதில் கீதாவைப் பற்றி பல்வேறு சிந்தனைகள் படர்ந்தன. உண்மையில் பெற்ற தாய் ஒருத்தியால்தான் அப்படி ஒரு செயலைச் செய்ய முடியுமேயன்றி ஒருவனுடைய அன்புக்காக ஏங்குபவளால் அப்படிச் செய்யமுடியும் என்று நினைக்கத்தோன்றவில்லை.

'கீதா நீ...' என்று பிரகாஷ் பேசமுடியாமல் தத்தளித்தான்.

'பிரகாஷ் நான் உங்கள் அன்புக்காக ஏங்குபவள் என்பதால் இப்படிச் செய்யவில்லை. என் பெற்றோர்களுக்கோ, சகோதரர்களுக்கோ இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் உதவவில்லை. உதவவேண்டும் என்றும் என்னால் சொல்ல முடியவில்லை. ஆனால் என்னையும் அறியாமல் என் கரங்கள் தானாக நீண்டுவிட்டன. பிரகாஷ் நான் வேண்டுமென்றோ, செய்யவேண்டுமென்றோ, கடமை என்றோ செய்யவில்லை. என்னையறியாத ஒரு சக்தி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்துவிட்டது' என்று விழிகளில் நீர் பெருகக் கூறினாள்.

'கீதா... கீதா' அவனால் பேசமுடியவில்லை.

'நீங்கள் பேசாமல் படுத்திருங்கள். நன்கு ஓய்வெடுங்கள்' என்றாள்.

'அண்ணா தேனீர்' என்று இரு கோப்பைகளில் தேனீர் எடுத்து இருவரிடமும் நீட்டினாள்.

கீதாஞ்சலியுடன் கதைப்பதற்கே அவளால் முடியவில்லை. முதலில் உண்மையிலேயே அவளை அண்ணனின் மாணவி என்றுதான் நினைத்தாள். ஆனால் அவள் மாணவி மட்டுமல்ல தனக்கு அண்ணியாகப் போகின்றவள் என்பதையும் தெரிந்து கொண்டபோது அவளுடன் எப்படிக் கதைப்பது என்றே புரியவில்லை.

'சுகுணா... இதோ... இவளைப்பற்றி உனக்குத் தெரியாதுதானே' என்றான் பிரகாஷ்.

'தெரியும் அண்ணா' என்றாள்.

'எப்படி?'

'இங்கு நடந்ததை நானும் தானே பார்த்துக்கொண்டிருக்கின்றேன். மிஸ் கீதாஞ்சலி என் அண்ணிதானே?' உள்ளத்தில் அடக்கிவைத்திருந்த எல்லாவற்றையும் ஒரே மூச்சில் கேட்டுவிட்டாள்.

'ஆமாம் சுகுணா. உன் அண்ணி செய்த வேலையைப் பார்த்தாயா?'

'பார்த்தேன் அண்ணா, ராமகிருஷ்ணருடைய சீடன் விவேகானந்தர் இப்படித்தான் நடந்து கொண்டாராம். அதேபோல உங்கள் மாணவியும் குருவுக்கு...'

'போக்கிலிப் பெண்ணே என்னைக் கேலியா செய்கின்றாய்' என்று அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

பிரகாஷ் எதுவுமே பேசவில்லை. மௌனமே உருவாகவீற்றிருந்தான்.

வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த கீதாவின் மனதில் குதூகலம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. எப்படியாவது அவனுடைய பூரண அன்பைப் பெற்றுவிடவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தவளுக்கு கடவுளே அளித்த சந்தர்ப்பமாகவே அதைக் கருதினாள். தானே வாந்தியெடுத்தால் அதைப் பார்க்கவே அருவருப்பவள். ஆனால் எப்படியோ கை நீட்டி அவன் எடுத்த வாந்தியை ஏந்திக்கொண்டாள். அருவருப்படையாது சாதாரணமாகவே நடந்துகொண்டாள்.

சிந்தனை வசமாகவே நடந்துகொண்டிருந்தவள் செவிகளில் 'ஹலோ கீதா' என்ற வார்த்தைகள் கேட்டதும் நின்றுவிட்டாள்.

'நீங்கள் இங்கேயா இருக்கின்றீர்கள்' என்றாள் கீதா.

'ஆமாம். நான் இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து இங்கே மாற்றலாகி வந்துள்ளேன்' என்றான் அந்த வாலிபன்.

அவனுடைய கண்கள் அவளை விழுங்கி விடுவன போலப் பார்த்துக்கொண்டிருந்தன.

'என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்?'

'உங்கள் அழகு பார்த்தாலும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் பேரெழில்' என்றான் அவ்வாலிபன்.

பெண்களை மயக்குவதில் கைதேர்ந்த பேர்வழி அவன். பெண்களை புகழ்ந்தால் எந்தப் பெண்ணும் மயங்கிவிடுவாள். அதிலும் அவளை அழகி என்று கூறினால் அதைவிட எந்தப் பெண்ணுக்கும் வேறு வாழ்த்துக் கூறவேண்டாம். ஆனால் இயற்கையாகவே எழிலுடைய கீதா தன் அழகைப் புகழ்வோரிடம் புன்னகை பூப்பாள். அவளை மயக்க, ஆசைமொழி பகர்வோர் அவள் புன்னகையில் மயங்கி விடுவார்கள்.

'ஆறு மாதத்துக்கு முன்பு உங்களைச் சந்தித்ததற்கும் இன்று காண்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம்' என்றான் அவன்.

'உண்மையாகவா சுதாகர்?'

'உண்மையாகத்தான் கூறுகின்றேன்.'

'அதற்குக் காரணம் உண்டென்றால் மிஸ்டர் பிரகாஷ் தான். எனக்கு விரைவில் திருமணம் நடக்கப்போகின்றது.'

'திருமணமா? உனக்கா?'

'ஏன் நான் திருமணம் செய்து கொள்ளக்கூடாதா? அப்படி ஏதும் சட்டமா?'

'இல்லைக் கீதா. ஆனால் உன்னை அவன் விரும்பித்தான் திருமணம் செய்கின்றானா?'

'ஆமாம்.'

'உன்னைப்பற்றி அவனுக்குத் தெரியுமா?'

'என்னைப் பற்றி என்ன தெரிய வேண்டும்'

'கீதா மறந்துவிட்டாயா? அல்லது நடிக்கிறாயா?'

'மிஸ்டர் சுதாகர். நீ மணமானவன். இளமையில் நடப்பவைகள் கனவுகள் போன்றவை. அவற்றை மறந்துவிடுவதுதான் மனிதத்தன்மை' என்றாள்.

'ஓ... கீதா ... ஐ...லவ்...யு வெறி மச்' என்றான்.

'யூ...பூல்...இடியட்' என்றாள் கீதா.

இடையில் ஆட்கள் வரவே அவள் பேசாமல் நடந்துகொண்டிருந்தாள். அவனும் அவளைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தான் திடீரென நின்றுவிட்டான்.

'கடவுளே; இது என்ன சோதனை. ஒருவரிடம் நட்புக்கொள்ளும்போது ஆராய்ந்து கொள்ள வேண்டும் என்பார்கள். அதே நட்பை விலக்கும் பொழுது நன்கு ஆராய்ந்தே விலக்க வேண்டும் என்பார்கள். ஆனால் இவர்களிடம் நான் நட்புக்கொள்ளவில்லையே சந்தர்ப்பம், சூழ்நிலை, இயற்கை, இளமை இவைகளின் கோளாறுகளால் ஏற்பட்ட கணநேர உறவுகள்...? உள்ளத்தில் இவர்களைப் பற்றி நினைக்கவோ மகிழவோ முடியாத நிலையில் இவர்களது தொல்லை ஏன் என்னைத் தொடருகின்றது. நான்... நான்......அவளால் மேற்கொண்டு எதுவும் நினைக்கத் தோன்றவில்லை. மனதில் நினைவுகள் தோன்றி அழிய வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தாள்.

இரவும் தனிமையும் மனிதர்களின் எதிரிகள் போலும் இரவிலும் எத்தனையோ நடைபெறுகின்றன. அத்துடன் இரவில், தனிமை, மனித மனத்தில் தோன்றுபவை அளவிடற்கரியன, எண்ணிலோ, எழுத்திலோ அடங்காதவை.

மேல்வானப் படுதாவில் வெண்மதி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்நியில் மலரும் மலர்களின் இனிய நறுமணத்துடன் சீதளத் தென்றல் சிலு சிலுவென்று வந்து புனிதத்தின் உள்ளத்தைக் குளிர வைத்துக் கொண்டிருந்தது.




குளிர்ந்த மனதில் பசுமையான நினைவுகள் படர்ந்தன. அவற்றின் செழுமையில், மதப்பில், சுகந்தத்தில் நினைவுகளில் கலந்து வலம் வந்தான் பிரகாஷ்.

திருமணப் பதிவு முடிந்து ஒருவனுக்கு நிட்சயம் செய்யப்பட்டவளாயினும், வெளி உலகத்தில் பிரகாஷின் உறவை அவள் வளர்த்துக்கொள்ளவில்லையேயன்றி உள்ளத்தால் அவனை மறந்துவிட அவளால் முடியவில்லை. அவனை மறப்பதற்காக அவள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அத்தனையும் அவன நினைவுகளை அழியாத சித்திரமாக மாற்றினவேயன்றி மறக்கும்படி செய்யவில்லை.

பிரகாஷிடம் அவள் கொண்ட உறவு உடலாலோ அன்றி வேறு நிலன்களாலோ ஆன ஒன்றல்ல சுற்றமும், சூழலும் படைத்த உறவல்ல. ஏதோ தெய்வீகமாக மலர்ந்த உறவு. அந்த உறவை மனித வாழ்வுக்கும் சட்ட சம்பிரதாயங்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகவே அவள் கருதினாள்.

கணவன் ஒருவன் வாழ்க்கைக்குக் கிடைத்த பின்பும், நலன் ஏதும் கருதாத, பயன் அற்ற ஓர் உறவாக இதயத்தை விட்டே பிரிக்க முடியாத உறவாக அவன் நினைவு மலர்ந்து நின்றுவிட்டதென்றால் அது தெய்வீகமானது தானே?

சாதாரண மனித வாழ்வில் பிணைப்புண்ட உறவுகள் ஏற்படுவதும், மறைந்து போவதும சகஜம். காதல் வாழ்வும், களியாட்டங்களும் நடாத்திவிட்டு திருமணமானதும் அவற்றை அடியோடு மறந்து புனிதமானவர்களாக மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவோர் பலர் இன்று நமது சமுதாயத்தில் பெரிய மனிதப் போர்வையில் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றனர்.

ஆனால் புனிதத்தின் மனதில் வளர்ந்த அன்பு சாதாரணமானது என்று கூறிவிட முடியாது. அதே அன்பு வாழ்வில் துணை பெறயிருந்தால் அவளைவிடப் பாக்கியசாலி இந்த உலகிலேயே இருந்திருக்கமுடியாது. ஆனால் திருமணம் என்ற உறவு வந்து அவளது அன்பு வெள்ளத்தை அணைகட்டித் தலை திருப்பியது. ஆயினும் அந்த அணையை மீறிய ஓர் தெய்வீக சக்தி அவன் நினைவை வளர்த்துக்கொண்டிருந்தது.

அதற்காக நம்பிய கணவனுக்கு துரோகமோ, துரோக நினைவோ, விகற்பமான எண்ணங்களோ அவள் மனதில் உதயமாகவில்லை.

அவளாக விரும்பியோ, விரும்பாமலோ வாழ்க்கை என்ற உறவை ஏற்றது போலவே திருமணம் என்ற உறவையும் ஏற்றுக்கொண்டாளாயினும் அவற்றின் புனிதத்தன்மைக்கு மாசு ஏற்படுத்தும் நினைவோ, செயலோ அவளிடம் இல்லை.

அவளுடைய ஒரே அண்ணன் பாஸ்கர் அன்றிரவே திருமலைக்கு வந்துசேர்ந்து விட்டான். 'அண்ணா நீ விரும்பிய அதேமாதிரிப் பெண். உனக்கும பலவிதத்திலும் பொருத்தமானவள். பார்த்த மாத்திரத்திலே எனக்குப் பிடித்துக்கொண்டது. நாளைக்கு நீங்களும் வந்து பாருங்களேன்' என்றாள்.

'என்னவோ புனிதம் நீ சொன்னால் சரிதான். எனக்கு ஒன்றும் தெரியும். இதுவரை காலமும் நான் சட்டப் புத்தகங்களைத் தான்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெல்லை ஐ. நடேசு,
நெல்லியடி.

கே: தமிழ் காங்கிரஸ் என்ன கொள்கைக்காக ஆரம்பிக்கப்பட்டது?

ப: ஒன்றையாட்சி அரசியல் திட்டத்தை ஒழித்து தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையைப் பெறப் போராடுவதற்காக!

ஃ

கே. சி. முருகன்,
அல்வாய் வடக்கு.

கே: ஏழைக்கும் இனிதாயிருக்கும் தமிழரசுக் கட்சி பொதுமக்களை பாச உணர்ச்சியுடன் தோழர்களே என அழைப்பது சரி. வாலறுந்த நரி என்று வருணிக்கப்படும் காங்கிரசுவாதியொருவர் பொதுமக்களை 'தோழர்களே!' என்று விழித்தால் அதன் அர்த்தம் யாதோ?

ப: புலி ஆட்டுக்குட்டி வேடம் போடுகிறதென்று அர்த்தம்!

ஃ

ஜெயமகன்,
சுருக்குப்பனை.

கே: தமிழ்நாடு சுயராச்சியமானால் ஈழத்தமிழ் மக்களாகிய எங்களுக்கும் உதவியாக இருக்குமா?

ப: தாய், பிள்ளையின் மீது எப்போதும் அக்கறைகொண்டுதான் இருப்பாள். ஆனால் அதற்காக, பிள்ளை தன்னுடைய அலுவல்களை தாயே கவனித்துக்கொள்ளவிட்டுத்து வளர்ந்த பின்னும் தாயின் கையை எதிர்பார்ப்பது பிள்ளைக்கு அழகல்லவே!

ஃ

ராஜலிங்கம்,
மானிப்பாய்.

கே: நீங்கள் யமதூதர்களைப் பார்த்திருக்கிறீர்களா?

ப: தினமும்தான் பார்க்கிறேனே தெருவில் — இ.போ.ச. பஸ் வடிவில்!

கே: இக்காலக்குமரிகளை எதற்கு ஒப்பிடலாம்?

ப: அத்திப்பழத்துக்கு!

ஃ

இ. காளிதாசன்,
கொட்டாஞ்சேனை.

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருமலையில் தனிப் பெருந் தலைவரின் கட்சி போட்டியிடுமா?

ப: திருமலையிலிருந்து பல்கலைக்கழகப் படிப்புக்கு ஒருவர்கூட செல்லவில்லையெனக் கூறி திருமலை மக்களை இகழ்ந்து பேசிய தமிழ் காங்கிரஸ் கட்சியினர் அங்கு இனி தலைகாட்ட முடியுமா? இப்போது திருமலைக்கு போவதற்கே தனிப்பெருந் தலைவர் பயந்து நடுங்குகிறாராம். இந்நிலையில் போட்டியாவது மண்ணாங்கட்டியாவது!

கே: திருமலையை தமிழ்ப் பிரதேசமாக தமிழ் காங்கிரஸ் கருதுகிறதா?

ப: இல்லை, அதை சிங்களவர்களுக்கு தாரை வார்த்துவிட அது முடிவுசெய்துவிட்டது. அதனால்தான் அங்கு தமிழ் பல்கலைக்கழகம் நிறுவுவதை எதிர்க்கிறது!

கே: அடுத்தமுறை அம்மையார் ஆட்சிக்கு வந்தால் தமிழர் நிலை என்ன?

ப: தமிழர்களை அரவணைத்துச் செல்லாவிட்டால், தமிழ்ப் பிரதேசங்களில் அம்மையாரின் ஆட்சி ஸ்தம்பித்துவிடும். 1961ம் ஆண்டு அம்மையாரின் ஆட்சி வடக்கிலும், கிழக்கிலும் இரு மாதங்கள் செயலிழக்கச் செய்ததை மறந்துவிட்டீர்களா?

'சண்'
வண்ணார்பண்ணை.

கே: தானும் தமது சகாக்களும் தமிழினத்திற்கு துரோகம் செய்ததை நிரூபித்தால் தங்கள் பதவிகளைய ராஜினாமா செய்வதாக தனிப் பெருந்தலைவர் ஒரு புதுக்கரடியை விட்டிருக்கிறாரே!

ப: ஆமாம், இரவு முழுவதும் தெருவில் அலைந்து திரியும் பரத்தையொருத்தி தான் பரத்தைத்தனத்தில் ஈடுபடுவதாக நிரூபித்தால் அத்தொழிலையே விட்டுவிடுகிறேன் என்றாளாம். இதுவும் அதுபோல இல்லையா?

கே: தமிழரசினர் தங்களது சமஷ்டிக்கொள்கையை கைவிட்டால் ஒத்துழைக்கலாமென்ற குரல் மீண்டும் எழுந்துவிட்டதே!

ப: தேர்தல் வரும்போது இப்படி ஏதாவது அபஸ்வரங்கள் எழுந்துகொண்டேயிருப்பது வழக்கம்தானே!

க. ஜெயானந்தன்.
மாதகல்.

கே: தவத்திரு. குன்றக்குடி அடிகளாரை கொலை செய்ய முயன்றதாக கூறப்படும் சம்பவம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: இப்பிரச்சினையில் தவத்திரு. அடிகளார் நடந்துகொண்ட விதம் தவறு என்பதே எனது தாழ்மையான கருத்து. அடிகளாரைக் கொலை செய்ய முயற்சி நடந்தது உண்மையாக இருந்தால், அக்கொடுமை புரிய முயன்றவர்களை அடிகளார் சட்டத்தின் கரங்களில் ஒப்படைத்திருக்க வேண்டும், அல்லது அவர்களை மன்னித்து விடுவது அடிகளார் கருத்தாயின் அச்சம்பவத்தை அந்த இடத்திலேயே மறந்து விட்டிருக்க வேண்டும்; பொதுக் கூட்டத்தில் இலைமறைகாயாகவேனும் அதைக் கூறி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கவே கூடாது.

இப்போது தமிழகம் சென்ற பின்பும், யாழ்ப்பாணத்தில் தம்மைக் கொலை, செய்ய முயற்சி நடந்ததாக அடிகளார் கூறியதாக, மாலை முரசு, தினத்தந்தி ஏடுகள் தெரிவிக்கின்றன. யாரோ ஒரு சிலர் செய்ய நினைத்ததாக கூறப்படும் மிருகத்தனமான செயலுக்கு அடிகளார் மீது அன்பு வைத்துள்ள யாழ்ப்பாணத்தவர் முழுப்பேருக்கும் அவமானம் ஏற்படுத்தக் கூடியமுறையில் அடிகளார் கருத்து வெளியிட்டது மிகப் பெரும் தவறு ஆகும். அடிகளாரின் கூற்றல் தமிழ் கூறும் நல்லுலகில் யாழ்ப்பாணத்தின் பெயருக்கு அவமானம் ஏற்பட்டு விட்டது. தமிழ் நாட்டு மக்கள், யாழ்ப்பாணத்தமிழர் மீது வெறுப்பு கொள்ளும் சூழ்நிலையை அடிகளார் தெரிந்தோ தெரியாமலோ உருவாக்கிவிட்டார்!

க. செல்வத்துரை,
'சதர் லேண்ட்' எல்ல.

கே: 'அண்ணா காவியம்' எழுதும் கவிஞர் காசி. ஆனந்தனின் முகவரியைத் தருவீர்களா?

ப: சுதந்திரன் முகவரிக்கு எழுதுங்கள்! உங்கள் கடிதம் கவிஞரிடம் ஒப்படைக்கப்படும்!

ஃ

ச. வன்மீகலிங்கம்,
எழுவைதீவு.

கே: தமிழரசுக் கட்சி ஒரு காலத்தில் அரசாங்க ஊழியரைச் சிங்களம் படிக்க வேண்டாம் என்று சொன்னதா?

ப: ஆமாம், தமிழ்ப் பிரதேசங்களில்கூட தமிழுக்கு இடந்தராமல் தனிச்சிங்களத்தை திணிக்க சுதந்திரக் கட்சி அரசு முயற்சித்த காலத்தில் அதை எதிர்த்து தமிழரசுக்கட்சி போராடியது அல்லவா? இப்போராட்டம் 1956 முதல் 1965 வரை நடைபெற்றது; இப்போராட்டத்தை வலுப்பெறச் செய்வதற்காக தமிழினத்தின் ஓரங்கமான தமிழரசாங்க ஊழியர்களையும் சிங்களம் படிக்க மறுக்கும்படி கட்சி வேண்டுகோள் விடுத்தது. தமிழரசுக்கட்சி மட்டுமல்லாது [illegible] பொன்னம்பலம் சுந்தரலிங்கம் போன்றவர்களும் தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிப்பதை அன்று எதிர்த்தார்கள். ஆனால் 1965ம் ஆண்டு ஏற்பட்ட தேசிய அரசாங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழையும் ஆட்சிமொழியாக்க ஒப்புக்கொண்டு சட்டம் கொண்டுவந்தபின்னர் தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிப்பதைக் கட்சி எதிர்க்கவில்லை!

கே: சிங்களமொழி இலங்கையின் உத்தியோக மொழியென்பதை தமிழரசுக்கட்சி ஏற்றுக்கொண்டுவிட்டதா?

ப: ஒருபோதும் இல்லை! இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் தனிச் சிங்களமே ஆட்சிமொழியென்று வெறிபிடித்து ஆடிய சிங்கள ஏகாதிபத்தியத்தைத் தனது போராட்டங்களின் மூலம் பணியவைத்து, வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழுக்கும் சிங்களத்துடன் சம அந்தஸ்து வழங்கும்படிசெய்தது தமிழரசுக்கட்சிதான். இதனால் நாடு முழுவதும் தனிச் சிங்களம் எனும் கொள்கை முறியடிக்கப்பட்டுவிட்டது. நாடு முழுவதும் தமிழுக்கு சம அந்தஸ்து கிடைக்கும்வரை தமிழரசுக் கட்சி தொடர்ந்து போராடி வரும்!

ஃ

ஜெகநாதன்,
சத்துருக்கொண்டான்,
மட்டக்களப்பு.

கே: வானொலியில் முழங்கும் காசி அண்ணாவும் நமது காசி. ஆனந்தனும ஒருவரா?

ப: ஆமாம்!

கே: கல்முனைத் தொகுதிக்கு தமிழரசு வேட்பாளர் யார்?

ப: பெரும்பாலும் ஜனாப் மசூர் மவ்லானாவாகவேயிருக்கும்!

திருவாளர்
**குயுக்தியார்**
C/o சுதந்திரன்
194 [illegible]
கொழும்பு-12.

# இலக்கிய உலகு

"வேதாளம்"

விக்கிரமனுக்குக் கதை சொன்ன வேதாளத்தை உங்களுக்குத் தெரியும். ஆனால் நானும் அதே வேதாளம் என்று நினைக்கிறீர்கள்? இல்லை. நான் முற்றிலும் புதிய வேதாளம். 'புதிய வேதாளம்' என்றால் கேவலம் கருத்து, கொள்கை, லட்சியம், எழுதுகோல், கட்சி என்பனவற்றையெல்லாம் மிக மிக அற்ப விஷயங்களுக்காக போக்கிலித்தனமாக விட்டு விட்டு 'அவதரிக்கும்' மகா மட்டமான மனிதப் பூச்சிகளைப்போல மாறிவிட்ட வேதாளமல்ல. சிந்தனையில், எழுத்தில், நோக்கில் மெருகேறிவிட்ட வேதாளம் அவ்வளவுதான்.

நான் 'திட்டுவதா'கவும், 'முடிந்து' விடுவதாகவும் பேசிக்கொள்கிறார்களாம். சமீபத்தில் ஒரு மேடையிலேயே இது நடந்தது. உண்மையில் நான் இட்டவுமில்லை, முடியவுமில்லை. சிலாபத்தில் ஒரு கூட்டத்தில் 'நல்ல விமர்சனம்' என்று சிலர் பேசிக்கொண்டார்கள். ஆனால் நான் செய்வது விமர்சனமா என்றால் அதுவுமில்லை. 'வசவு'க்கும், 'முடிச்சு'க்கும் 'விமர்சன'த்துக்கும் எனக்கும் 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்குமுள்ள தூரம்.

அப்படியானால் நான் செய்வதுதான் என்ன?

சிம்பிள்! நான் உண்மையை உள்ளவாறு சொல்கிறேன். 'அம்புடுதே.'

கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய் என்று சிலநேரம் ஆகிவிடும். (இன்றைய கலை, இலக்கிய உலகில் போல) எனவே நீங்களே தீர விசாரித்துக் கொள்ளுங்கள்.

இப்படியெல்லாம் யோசித்துவிட்டுத்தான் 'தங்களைப்பற்றி' 'அவர்களையே' சொல்லப்பண்ணப் போகிறேன். இவ்வாரம் ஒரு 'பிரகிருதி'யின் 'மனச்சாட்சி' பேசுகிறது. இனி நீங்களும் 'அதுவும் பட்டது பாடு.

★

ரசிகர்களே! என் தமிழர்களே!

நான் மிகவும் நொந்து போயிருக்கிறேன். வேதாளத்தின் கையில் என் 'குடுமி' இப்படிச் சிக்கிக்கொள்ளும் என்று நான் 'ட்றீம்' பண்ணவுமில்லை.

இற்றைக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னால் என மிடுக்கும், கம்பீரமும், கௌரவமும்தான் என்ன? சொல்லின் வேந்தனுக வல்லவா இருந்தேன். என்னுடைய 'படான்' சைக்கிளுக்குக்கூட அந்தப் பெருமை உண்டே. ஆனால் அந்தோ! கேவலம் மிகமிக அல்பமான ஒரு 'மேட்டருக்'காக மாறிப்போனதே மாறிப்போனேனே. சிறைச்சாலை என்ன செய்யும் எனக் கேட்ட நான் ஊர் மாற்றம் என்ன 'பண்ணும்' எனக் கேட்க முடியாத 'பேடிப் பொடிய'னானேன்.

எனது இலக்கிய வாழ்வு மிக மிக மிகப் பாரியது. 'அந்தச்சபல'த்தோடு தான் நானே கோணலானேன். 'புஸ்த்தகம்' செய்தேன். (எழுதினதைத் தான் சொல்கிறேன்) 'பத்து நூறு' பரிசும் அடிக்கலாமெனக் கண்டேன். என்ன பண்ணலாம் என யோசித்தேன் 'பல்டி' அடிக்க.

எனக்கொரு 'டயில்டைகரை'த் தெரியும். தமிழ்க் கடவுளாலேயே முடியாத முட்டையில் மயிர்களையும் வேலையைக்கூட அந்தப் பெரியவரால் செய்ய முடியும்.

அவரும் பரிசு தருபவரில் ஒருவராக இருந்தார். எனவே என் 'புஸ்த்தக'த்தை அவரிடம் தூக்கிக் கொண்டோடினேன். என் 'புஸ்த்தக'த்தைத்தொட்டு ஞானஸ்நானம் கொடுத்தார். 'எக்சாம்பிளா'க 'பஸ்' என்பதை 'வசு' என 'சேஞ்ச்' பண்ணினார். பிறகென்ன? அடித்தேன் அரைப் 'பிரைஸ்' (இந்தத் தமிழெல்லாம் அவருக்குப் பிடிக்காது, என்ன பண்ண? பெரியப்பாவுக்குப் பிடிக்குமே. அதனால் 'ரைட்' பண்ணுறேன்.)

என் இரண்டாவது 'இலக்கிய மகன்' செத்துப் போனான். 'அச்சுக் கூலி' கொடுக்காததால் தான் அந்தச் சாபத்தால் செத்தானே என்னவோ?

இப்போ எங்கெங்கோ திரிகிறேன். 'எப்படியாவது' வயிறு வளர்க்கவேண்டுமே.

இரண்டாவது கலியாணம் பண்ணிக் கொண்டேன். குழந்தைக்கு என் பெயர்தான். கொண்டிழுப்பது பெரும்பாடாயிருக்கிறது. ஒருவனாவது உதவி செய்ய மாட்டானுமே. (ஒருவன் சோரம் போனால் இப்படியா வஞ்சிப்பது?) பணமா இவர்களிடம் கேட்கிறேன்? (அதைத் தரத்தான் எங்கள 'புள்ளி'களிருக்கின்றார்களே) இந்த 'டேர்ட்டி' 'டமிலனே' இப்படித்தான்.

இரண்டாவது இதழுக்காக ஒருவரிடமிருந்து 32 வரிகளைப் 'பிடுங்கிக்' கொண்டேன். (அவர் என் குழாத்தைச் சேர்ந்தவரல்லர் தான்) என்றாலும் அவரின் பாட்டைக் கொண்டே அவரின் தலைவர்களுக்கே அதைச் சமர்ப்பித்து விட்டேன். எப்படி என சாமர்த்தியம். (இனி அவரும் எனக்கெழுதமாட்டாரென்றெண்ணுகிறேன்) சோரம் போவது போகிறேன் எப்படிப் போனால் என்ன? இப்பாரிய விஷயத்தில் அடியேன் [illegible]ரும் வேந்தனையன்றே?

என் சிந்தனைகள் உண்மையானவை. இரண்டாவதாக நான் சிந்தித்திருப்பதைத்தான் பாருங்களேன். 12-ம் பக்கத்தில் இரண்டாவது சிந்தனை என் மன அரிப்புத்தான். 3-வது சிந்தனையின் கடைசி ஐந்து வரிகளையும் படித்துவிட்டு என்னைச் சந்தேகிக்காதீர்கள். என்ன செய்வது?—நான் உண்மையைத்தானே எழுத முடியும்.

6-வது சிந்தனையை என்னை எண்ணியே 'வடித்தேன்'. அதற்கு இலக்கியமாக நானே இருக்கும்போது வேறு 'எக்ஸாம்பிள்' எதற்கு?

நான் காதலித்தவன். காதலித்துக்கொண்டிருப்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# நவரத்தினத்தின் தடுமாற்றம்!

ஈழத் தமிழ் நாட்டுக்குச் சமஷ்டி அமைப்பின் கீழ் சுய நிர்ணய உரிமை வேண்டும் - சுயாட்சி வேண்டும் என்ற கொள்கையை முதன் முதல் தமிழ் பேசும் மக்கள் முன் வைத்த கட்சி இலங்கைத் தமிழரசுக்கட்சி.

இந்தக் கொள்கையைத் தனது உயிருக்கு உயிராகக் கொண்டு அதற்காக அயராது உழைத்து வரும்கட்சி - இலங்கைத் தமிழரசுக்கட்சி.

இந்த இலட்சியத்தை நோக்கித் தமிழ் மக்களை அழைத்துச் செல்லும் கட்சி - இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இந்தக் கொள்கைக்காக இரத்தம் சிந்தி - பல தோழர்களைப் பலி கொடுத்துப், சொத்துச் சுகங்களை இழந்து சிறையில் சித்திரவதைப்பட்டும் கொள்கையிலிருந்து சற்றும் பிறழாத கட்சி - இலங்கைத் தமிழரசுக் கட்சி.

சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்து - தவறான பாதையில் சென்று தமிழரசு எனும் 'வீட்டை' விட்டு வெளியேறி இன்று உறுதியான கொள்கையின்றி இடத்துக்கு இடம் ஒவ்வொரு கருத்தைக் கூறி வருகிறார் ஊர்காவற்றுறை நவரத்தினம்.

ஆம், 'வீட்டை' விட்டு ஓடிப் போனவர்கள் யாரும் இதுவரை உருப்பட்டதில்லை. இது வரலாறு போதிக்கும் பாடமாகும்.

கட்சியை விட்டு விலகிப்போன நவரத்தினம், மீண்டும் தன்னைக் கட்சியில் சேர்த்துக் கொள்ளுவார்களோ என்று சில காலம் நோட்டம் பார்த்தார்.

அது நடக்கவில்லை!

கட்சியில் சேர விண்ணப்பிக்கும்படி ஊர்காவற்றுறை மாவட்டக் கிளை விடுத்த வேண்டுகோளையும் தமது காலில் போட்டு மிதித்தார்.

புதுக்கட்சி அமைக்கால் தான் தானும் ஒரு தலைவனாக உலாவரலாம் என்று தெளிவாக அறிந்து கொண்டார்.

புதிய கட்சியென்றால் அதற்கொரு புதிய கொள்கை வேண்டுமே!

மூளையைப் போட்டுத் துழாவிப் பார்த்தது மூளை. தமிழரசுக்கட்சி கூறிவந்த சுயாட்சித் தத்துவத்தைத் தவிர அதற்கு வேறு எதுவுமே அகப்படவில்லை.

ஆனால், தமிழரசுக்கட்சி கூறிவரும் அதே அரசியல் தத்துவத்தை முன் வைத்தால், தமிழரசுக்கட்சி மலைபோலிருக்க உமக்கேன் புதியகட்சி என்று மக்கள் கேட்கமாட்டார்களா?

எனவே சுயாட்சித் தத்துவத்துக்குச் சில "டச்சப்" கொடுக்க முற்பட்டார்!

தமிழ்ப் பகுதிகளுக்கு டொமினியன் அரசு அமைப்பதே தமது கழகக் கொள்கை என்பார் ஓரிடத்தில்.

வேறோர் இடத்திலோ சுயாட்சியே வேண்டும் - பிரிவினையே வேண்டும் என்பார்.

தமிழ் அரசுக்கும் சிங்கள அரசுக்குமிடையேயான தொடர்பை சமஷ்டி ஆட்சியின் கீழ் ஒரு வரையறை செய்ய வேண்டுமென்பது தமிழரசுக் கட்சியின் சித்தாந்தம்.

ஆனால் சுயாட்சி கேட்பதாகக் கூறும் நவரத்தினமோ தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையே இருக்க வேண்டிய உறவை முடிவு செய்யும் பொறுப்பைச் சிங்கள மக்களிடமே தாம் ஒப்படைத்து விடுவதாகத் தமது கழகத்தின் தலைமையுரையில் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

நீ நமக்குக் கப்பம் கட்டும் சிற்றரசாக இரு - என்று தமிழ் அரசிடம் சிங்கள அரசு கூறினால் அதையும் திரு. நவரத்தினம் ஏற்றுக் கொள்வார் போலும்!

இப்படி, தமிழரசுக் கட்சியை விட்டுப் பிரிந்த பின்னர், தமிழரசுக் கட்சியின் இலட்சியமாகிய 'சுயாட்சி' என்ற வார்த்தையை மட்டும் தமது புதிய கூச்சலாக வைத்துக் கொண்டு கொள்கைக் குழப்பத்தில் சிக்கித் தவிக்கிறார் நவரத்தினம்!

தமது இலட்சியம் எது என்பதில் அவருக்கே தெளிவில்லை!

இங்கிலாந்திடம் இலங்கையின் அதிகாரப் 'பிடி' எதுவும் இப்போது கிடையாது.

இலங்கை இப்போது பரிபூரண சுதந்திர நாடு!

இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை படைத்தவர்கள் இலங்கை மக்களேயன்றி இங்கிலாந்து மகாராணி அல்ல!

இதை உணராது எங்கோ இருக்கும் மகாராணிக்குக் காவடி தூக்கி ஈழத் தமிழினத்துக்குச் சுயாட்சி பெறப் போவதாக நவரத்தினம் கூறுவது ஒரு சிறந்த நகைச்சுவையாகும்.

தமிழரசுக் கட்சியை விட்டுப் பிரிந்த நவரத்தினத்தால் கொள்கைக் குழப்பத்தில் சிக்கித் தவிக்க முடிகிறதே தவிர - தமிழரசுக் கட்சியின் இலட்சியத்துக்குச் சமானமான வழி ... த் திட்டமெதையும் மக்கள் முன் வைக்க முடியவில்லை!

# கல்விச்சபை வெறியாட்டம்! தமிழ்மாணவர் திண்டாட்டம்!

## உயர் கல்வியை வெட்டி வீழ்த்த திட்டமிட்டு நடக்கும் சதி!

தமிழ் பேசும் மக்களுக்கு தேசிய உயர் கல்விச் சபை அப்பட்டமான பாரபட்சம் காட்டி வருகிறது. அண்மையில் தமிழன் என்ற ஒரே காரணத்துக்காகப் பேராசிரியர் மயில்வாகனம் உதைத்துத் தள்ளப்பட்டது ஒருபுறமிருக்க, தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு உயர் தரக் கல்வியை வழங்குவதில் துவேஷமும், இனவழிப்பட்ட பாரபட்சமும் தலை விரித்தாடுகின்றன. சிங்கள மாணவர்களுக்குத் தரப்பட்டுள்ள அதே கல்வி உரிமைகள் தமிழ, முஸ்லிம் மாணவர்களுக்குக் கொழும்பு பல்கலைக் கழகத்தில் மறுக்கப்பட்டுள்ளன.

கொழும்புப் பல்கலைக் கழகத்தையும் சிங்கள மாணவர்களுக்கு மட்டுமேயுரிய பல்கலைக் கழகமாக மாற்றுவதற்குத் திட்டமிட்ட சூழ்ச்சி நடைபெற்று வருகிறது. தேசிய கல்விச் சபையும், கல்வியமைச்சரும இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக முடைநாற்றம வீசும் வகுப்புவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்நிலையில் தேசிய உயர் கல்விச் சபையை இன்னும் இயங்குவதற்குப் பிரதமர் விட்டு வைத்திருக்க வேண்டுமா? தேசிய ஐக்கியம் என்று அடிக்கடி கதறும் பிரதமரும் தேசிய உயர் கல்விச் சபையின் தமிழ் விரோத நடவடிக்கைகளுக்கு உடன்படுகிறாரா? உடன்படாவிடில் கல்விச் சபையைக் கலைத்துவிட நடவடிக்கை எடுக்காதது ஏன்?

—இவ்வாறு தமிழ் கல்விமான்களும், அறிஞர்களும், தமிழ்ப்பெற்றார்களும் மாணவர்களும் துடிதுடிப்புடன் கேட்கிறார்கள்.

தமிழ் மொழி மூலம் போதனை பெறும் கலைத்துறை மாணவர்களை கொழும்பு பல்கலைக் கழகத்தில் புதிதாக அனுமதிப்பதில்லையென்று உயர் கல்விச சபை தீர்மானித்திருக்கிறது. இது கொழும்பு பல்கலைக் கழகத்தையும் படிப்படியாகச் சிங்கள மயமாக்கும் ஓர் திட்டமாகும்!

இலங்கையில் பிக்கு பல்கலைக் கழகத்தை தவிர நான்கு பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் கொழும்பு பேராதனை ஆகிய இரு பல்கலைக் கழகங்களில் மட்டுமே கலைப் பிரிவில் தமிழ் மொழிப் போதனை நடைபெறுகிறது. இதையும் ஆக ஓரே ஒரு பல்கலைக் கழகத்துக்கு மட்டும் மாற்றும் நோக்கமென்ன? இது தமிழ்ப் பிள்ளைகளுக்கு இழைக்கப்படும் ஓர் அநீதியல்லவா?

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் இல்லாத சில துறைகள் பேராதனையிலுண்டு. பேராதனையில் இல்லாத சில துறைகள் கொழும்பிலுண்டு. எனவே இரு பல்கலைக் கழகங்களிலும் கலைத்துறை தமிழ்ப் பிரிவு தொடருவது அவசியமாகிறது. சிங்கள மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அந்த உரிமைகள் தமிழ் மாணவர்களுக்கும் தரப்பட வேண்டும்.

—இப்படித் தமிழ்ப் பிரமுகர்கள் பலர் ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்.

இதுசம்பந்தமாக ஜேம்ஸ், டி. இரத்தினம் வெளியிட்டுள்ள ஓர் கடிதத்தில் கூறுவதாவது:—

"தமிழ் மூலம் கல்வி பெற விரும்பும் தமிழ்ப்பேசும் மாணவர்களின் உயர் தரக் கல்வி பற்றி அரசாங்கத்தின் கொள்கை தான் என்ன? இலங்கையில் நான்கு பல்கலைக்களகங்கள் உண்டு. இவற்றில் வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களில் தமிழ் போதனை நடைபெறுவதில்லை.

"தமிழ்ப்பகுதிக்கு பல்கலைக்கழகம் அமைப்பதில் தமிழர்கள் தங்களுக்குள் சண்டை போடுகிறார்கள் என்ற போலிச்சாட்டுடன், தமிழ் மக்களின் உடனடித் தேவையான தமிழ் பல்கலைக் கழகத்தை அரசாங்கம் தள்ளிப் போட்டுவிட்டது. தமிழ்மொழி மூலம் போதனையளிப்பதற்குக் பேராதனை கொழும்பு, பல்கலைக்கழகங்களே இன்று இருக்கின்றன.

இந்த இரு பல்கலைக்கழகங்களில் கூட தமிழில்போதனை பெற விரும்பும், தமிழ், முஸ்லிம்மாணவர்களுக்கு பிரவேசம் வழங்குவதிலும் வெவ்வேறு பாடங்களை கற்பதற்கு வசதி செய்து தருவதிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது.

தொழிற்றுறை நிர்வாகம், கைத்தொழில் நிர்வாகம், போன்ற பல்வேறு நவீன் துறைகளில் கல்வி பெறுவதற்கும் எந்த ஒரு தமிழ் பேசும் பிள்ளைக்கும் வசதி செய்து தரப்படவில்லை. அதே வேளையில் சிங்கள மாணவர்களுக்கு இவ்வசதிகள் பூரணமாகத் தரப்பட்டுள்ளன.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலம் வரலாற்றுத் துறையை கற்பதற்கு விண்ணப்பித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு இப்பொழுது அச்சந்தர்ப்பம் மறுக்கப்படுகிறது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இத்துறையில் பயிலவிரும்பும் தமிழ். முஸ்லிம் மாணவர் பலரிருந்தும், இந்த சட்ட பூர்வமான உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இது ஓர் அப்பட்டமான பாரபட்சமாகும்."

தமிழரசுக் கட்சியின் இலட்சியமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தான் சிறிது மாற்றித்திருத்தி, வேறு ஏதோ புதிய கொள்கையைக் கூறுவதுபோல மக்களை ஏமாற்ற நினைக்கிறார் நவரத்தினம்.

நவரத்தினம் கூறினுலென்ன - வேறு யார் யார் கூறினுலென்ன - சுயாட்சிக் கொள்கை எனும் அடிப்படைத் தத்துவம் தமிழரசுக்கட்சியினுடையது!

ஆனால் சுயாட்சிக் கொள்கையில் நவரத்தினத்துக்கு இருக்கும் குழப்பம் தமிழரசுக்கட்சியிடம் கிடையாது!

தெளிவான கொள்கை - அதையடையத் தெளிவான பாதை - தமிழரசுக் கட்சியிடம் இருக்கிறது!

தமிழரசுத் தலைமைப் பீடத்தில் உள்ள ஒரு சிலர் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக - தமிழரசுக் கட்சியை அழித்தொழிக்க முயலும் ஒரு சில நச்சரவங்களின் கைப்பாவையாக மாறி - கட்சிக்குத் துரோகம் புரிந்து - கட்சியை விட்டு ஓடிவிட்ட நவரத்தினத்தால், தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கை மீது எவ்வித குறையும் குற்றமும் காண முடியவில்லை!

அப்படியானால் நவரத்தினம் கட்சியை விட்டு ஏன் ஓடினார்?

கொள்கை வேறுபாடு காரணமாகவா? அல்ல, அல்ல,

தமிழரசுக் கட்சியைச் சமயம் பார்த்துக் கழுத்தறுக்கக் காத்திருந்த சில கழுகுகளின் ஆசை மொழியை நம்பி - புதியகட்சி அமைத்துத் தனித் தலைவனாக உலாவரலாம் என்ற பேராசையினால் தோன்றியதே நவரத்தினத்தின் சுயாட்சிக் கழகம்!

கொள்கை மாச்சரியத்தால் அல்ல;

தனிப்பட்ட குரோதத்தால் -

தனித் தலைவனாக உலாவர வேண்டும் என்ற பேராசையால் -

கலப்பற்ற சுயநலத்தால் -

உருவாகியிருப்பதே நவரத்தினத்தின் கழகம்.

இதே காரணங்களுக்காக அண்ணாவின் தி. மு. கழகத்திலிருந்து வெளியேறி வீரர்கள் போல வேடம் போட்ட சுயநலப புலிகளான சம்பத்துக்கும் கண்ணதாசனுக்கும் தமிழ் நாட்டு மக்கள் அளித்த பாடங்களை இலங்கைத் தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கழகத்தில் அண்ணாவுக்கு அடுத்த நிலையிலிருந்த சம்பத், கழகத்தைவிட்டு வெளியேறியதும் நாட்டில் செல்லாக் காசானார்!

தமிழரசுக் கட்சியிலிருந்தபோது 'மூளை' என வர்ணிக்கப்பட்ட நவரத்தினமும் இயக்கத்தை விட்டுப்போனபின் செல்லாக் காசுதான்!

இதை அடுத்த தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள் [illegible] உறுதிப்படுத்துவார்கள் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கப்புயலென சிங்கத் தமிழினம் பொங்கியெழுந்திடில்-சங்கத்தமிழுக்கு பங்கமே வராது!

"சூழ் விழுந்த கண்களிலே ஒளி பிறந்தே ஆக வேண்டும்! குவிந்திருந்த தலைகளினி நிமிர்ந்து நிறைந்தே பேச வேண்டும்! வளம் கொழிக்கும் தமிழ் மொழியின் இளமை மீண்டும் மிளிரவேண்டும்! அடிமைப் பட்ட இனமா தமிழினம்? இல்லை, இல்லை! வங்கப் புயலென, சிங்கத்தமிழினம், பொங்கி எழுந்திடில், சங்கத் தமிழுக்குப், பங்கமே இங்கில்லை.

வாலிபத் தோழர்களே! தமிழினத்தின் புதிய உலகம் கண்களுக்குத் தெரிகிறது! பொருள் நிறைந்த எதிர்காலம், வருக, வருக, வருகவென எம்மை அழைக்கிறது! தமிழ்த்தாய் தந்த காளைகள் கோழைகள் அல்ல! சுயநலமும், அழுக்காறும் நிறைந்த கும்பல்கள், தாங்கள் அரை, முழு பதவிகளுக்காக, எமது காளைகளைக் கோழைகளாக்கத் துணிகிறார்கள். ஆனால் முடிவு...?

தோல் தடித்து விட்டால் சூடு, சுரணை தெரியாது தோழர்களே! இதயம்தடித்து விட்டால் எம், இனம், மொழி, கலை, கலாசாரம் பற்றிய எண்ணமோ சிந்தனையோ எழ முடியாது, ஒப்பரிய தமிழின் விடுதலைககு உழைப்பதே, எமதரும் வாலிபர்கள் உள்ளங்களில் நிறைந்துள்ள தியாக உணர்ச்சி என்பதைஉணராதவர், தம் பதவிக்காக வாலிபர்களைப் பயன்படுத்தப் பார்க்கிறார்களே! இவர்களுக்கெல்லாம் தகுந்த பதில் கொடுக்கும் நாள் இதோ உங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

தியவாதிகள் முனைவதின் காரணமாக, அங்கு சிங்களக் கள்ளக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. இதை இங்குள்ள பல தமிழர் அரசியல் கட்சிகளும் நன்கறியும். ஆனால் அதைத் தடுப்பதற்கு முதன் முதலாக நடவடிக்கை எடுத்துக் கொண்டது தமிழரசுக் கட்சியொன்றுதான.

யேற்றத்தை தடுத்து நிறுத்த அரசாங்கத்தை தூண்டினோம். அப்படிக் குடியேறுவோர் மீது வழக்குத் தொடர்ந்தும், வேறு பல நடவடிக்கைகள் மூலமும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது தமிழரசுக் கட்சி. இதன் பயனாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதினால் பலர் குற்றவாளிகளாகக் கண்டனர். இன்னும் இது சம்பந்தமாகச் சுமார் 600 வழக்குகள் விளக்கத்திற்கு இருக்கின்றன. எனவே இங்கு ஒரு தமிழ் பல்கலைக் கழகம் அமைப்பதைத் தொடர்ந்து, இங்கு சிங்களக் குடியேற்றத்தைத் தடுப்பதுடன், சகல தமிழர் மாகாணங்களுக்கும் மத்தியிலே இது அமைவதாகவும் இருக்கும்.

## யூ. என். பியுடன் நாம் சேர்ந்த காரணம்

'அன்று தொடக்கம் நான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அடிவருடி வந்தேன். ஆனால் கடைசியில் இவர்களும் வந்து விட்டார்கள் தானே!' என்று பல மேடைகளில் திருவாளர் பொன்னம்பலம் கூறி வருகிறார்கள். ஆனால் வாலிபர்களே! அவரும் அவர் கோஷ்

மட்டுவில் தெற்கு வேதக்கேணி வட்டாரத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் கடமை வீரர் திரு. வ. ந. நவரத்தினம் வானைப் பிளக்கும் கரகோசங்களுக்கிடையே கூறினார்.

வேதக்கேணி கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெற்ற இக்கூட்டத்திற்குத் திரு. எஸ். முத்திலிங்கம் தலைமை தாங்கினார்.

திரு: நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

''கடந்தகால அரசியல் சம்பவங்கள் அனைத்தும், எமது மத்தியிலே உள்ள பலதரப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களினதும், வீர, தீர, சூரத்தனங்களை எல்லாம் அம்பலப்படுத்தி எடுத்துரைத்துள்ளது. உங்கள் மத்தியிலே இன்று வந்து 'அண்டத்திலே ஒரு மணி மண்டபம் கட்டித்தந்தோம். ஒன்று இரண்டா ஒன்பதினாயிரம் வீதிகளுக்கு மண் போட்டோம்.' என்று கூறும் அத்தனை பேரையும் தெரியும், ஆமையைப் போன்று ஆயிரம் முட்டை போட்டும் அசையாமல் இருப்பதும் ஒரு முட்டை போட்ட கோழியைப் போல் கொக்கரிப்பதும் யார் என்பதும் உங்

தமிழர்கள் குறிப்பாகத் தென் இலங்கையிலே, மத்திய மாகாணங்களிலேஉள்ள தமிழர்கள், அவ்வப் பகுதிகளில் உள்ள சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ வேண்டும்! இதனால் தான் நாம் தமிழரசாரின் மாவட்ட சபை மசோதாவை எதிர்த்து வாக்களித்தோம்' என்று ஒரு சிலர், பல மேடைகளில் முழக்கமிட்டு வருகிறார்கள்:

'இந்த மேதாவிகளைக்கேட்கிறோம்: 1958-ல் இலங்கைத் தீவு பூராக நடைபெற்ற இனக் கலவரத்தின்போது தமிழின மக்கள் அகதிகளாகக் கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டார்களே அவர்கள் எங்கு சென்றார்கள் ஆமாம் அவர்கள் வடகிழக்கு மாகாணங்களுக்குத்



## அடிமை நிலையை அறுத்தெறிய தமிழரசுக் கொடியின் கீழ் திரள்வீர்!

பிரதேசமாகக் வழி வகுத்தவர்கள் யார்? பட்டிப்பளை ஆறு எனும் தமிழ் பிரதேசத்தில்சுமார் 4983 பேர் வீதம் சுமார் 30,000, சிங்களவரைக் குடியேற்றி, அதை கல்லோயா என்ற ஒரு சிங்களக் குடியேற்றமாக மாற்றி விட்ட பெருமை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கே சாரும்.

எமது நோக்கம் வகுப்புவாதக் கொள்கை அல்ல, ஆனால் எமது இன, மொழி, கலை, கலாசார உரிமைகளைப் பெறுவதே! அன்று எமது கிளிநொச்சிப் பகுதியில் சுமார் 1000 சிங்களக் குடிகளை குடியேற்றியிருந்தார்கள். ஆனால் எமது கட்சியின் விடா முயற்சியின் பயனால் தான் இன்றுகிளிநொச்சி தமிழ்ப் பிரதேசமாக இருக்க முடிகிறது.

### இந்துபல்கலைக் கழகமா, தமிழ் பல்கலைக் கழகமா?

திருவாளர் பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தில் பேசும் பொழுது இந்து பல்கலைக் கழகம் வேண்டுமென்பார், அதே வேளையில் பாராளுமன்றத்தில் பேசும்

பிரதேச சுபாட்சியை நிலைநாட்ட வேண்டும் என்பதே எமது முழு நோக்கமும். எனவே, திருகோணமலையில் நடை பெற்று வரும் கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதைத் தொடர்ந்தே நாம் எமது கொள்கைகளை நிலைநாட்ட முடியும்.

இன்று திருகோணமலையில் திகழும் சிங்கள கள்ளக் குடி

டியும் அன்று தொட்டே, அரை, முழு பதவிக்காக எது வித ஒப்பந்தமோ உத்தரவாதமோ இல்லாமல் யூ. என். பியின் அடிவருடி வருகின்றனர். அதே நேரத்தில், எமது பக்கபலம் இல்லாமல் ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று கண்ட ஐக்கிய தேசிய கட்சி

(9 ம் பக்கம் பார்க்க)


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14 .


## இளைஞர்களுக்கு நவம் அழைப்பு!

களுக்குப் புரிந்துவிட்டது. இதைப் பற்றி நான் மேலும் கூறுவது வீண் காலம் கடத்தலாகும்!

தோழர்களே! அன்று 'குடும்பித் தமிழா' என்று எம்மைப் பார்த்துக் கொக்கரித்தோரைக் கூறுபோடுவோம் என்று கிளம்பியதே ஒரு கும்பல், அவர்களுக்கெல்லாம் அரசியல் ஞானம்பற்றி அரிவரிப் பாடம் கற்றுக் கொடுத்த பெருமை எமது தமிழரசுக்கட்சிக்கே சாரும். என்று நாம் கூறும்பொழுது தமிழினமே பெருமைப்படுகிறது.

### அறுதைகளாகக் கப்பலில் ஏற்றப்பட்ட தமிழர் எங்கு சென்றனர்?

''இலங்கைத் தீவில் எங்கும் எமது மொழிக்கும் எமது இனத்திற்கும் சம அந்தஸ்து வேண்டும்! வியாபாரத்துறையிலும், உத்தியோகத் துறையிலும் உள்ள

தான் வந்து சேர்ந்தார்கள் தவிர, மத்திய மாகாணத்திற்கோ, அல்லது ஊவா மாகாணத்திற்கோ செல்லவில்லை.

இதற்குக் காரணம் வடகிழக்கு மாகாணங்கள், தமிழனுக்கு தாய் வீடு போன்றது, எனவேதான் தமிழன் வீட்டை பலப் படுத்தி, தன்னுடைய ஆட்சியின்கீழ் வைத்துக் கொண்டே ஏனைய மாகாணங்களிலுள்ள, சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக இருப்பதற்கு சமஷ்டி ஆட்சி கோருகிறோம்.

இத்தகைய சாதாரண விஷயங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியாது, குட்டையைக் குழப்பி விடும் அசம்பாவிதக் காரர்களுக்கு வாலிபர்கள்தான் அரசியல் பாடம் புகட்டவேண்டும்!

### கல்லோயாவில் சிங்களக் குடியேற்றம் செய்தது யார்?

1947 ல் கல்லோயாவில் சிங்கள மக்களைக் குடியேற்றி இதை ஒரு தனிச் சிங்களப்

போது, பூரண பல்கலைக் கழகம் தான வேண்டும் மென்பார், புத்தூரில் பேசும் போது, மழவராயரின் திரண்ட சொத்துக்கள் இருப்பதாயும், அதைக்கொண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு இந்து பல்கலைக்கழகம் அமைத்து விடுவது நிட்சயம் என்பார், அடுத்த நாள் இணுவிலில் பேசும் போது, இராமநாதனின் திரண்ட சொத்துக்கள் இருப்பதால், யாழ்ப்பாணத்தில், இராமநாதன் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவியே தீருவேன் என்பார், ஆனால் உண்மையில், என்ன பல்கலை கழகம் எப்போது எங்கு நிறுவப் படுமோ தெரியாது.

### தமிழ் பல்கலைக் கழகத்திற்கு ஏன் திருமலை ஏற்றது?

இன்று திருகோணமலைப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதின் மூலம் [illegible] ஒரு சில சிங்கள ஏகாதிபத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூனாச் சிவசிதம்பரத்தின் மற்றோர் முடக்குவாதம்!

தமிழ் மக்கள் முழு முட்டாள்கள்; அவர்களுக்கு அரசியல் அரிச்சுவடு கூடத் தெரியாது' என எண்ணிக் கொண்டு பேசுவதிலும் எழுதுவதிலும் அறிக்கைகள் விடுவதிலும் தமிழ்க் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் அசகாய சூரர்கள். இது நாடறிந்த உண்மை!

அண்மையில் நவாலியில் நடைபெற்ற தமிழ் காங்கிரசுக் கூட்டம் ஒன்றில் கூட இந்த உண்மையை எடுத்துக் காட்டுவது போல் தமிழ் காங்கிரசுக் கட்சியின் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினரும் அரைச் சபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

'அறிஞர் அண்ணா திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டதுபோல் தமிழரசுக் கட்சியினரும் தமது சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டால் அவர்களுடன் சேர்ந்து தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கத் தயாராக இருக்கிறோம்"

உடுப்பிட்டியார் இப்படியான ஓர் அசட்டுத்தனமான

## முதலில் பிரிவினை கோரிய அண்ணாவே முடிவில் சமஷ்டி மீது நம்பிக்கை வைத்தார்!

யோசனையை வெளியிடுவதைவிட தனக்குத் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து உழைப்பதில் ஆர்வமில்லையெனச் சொல்லி இருக்கலாம். புத்திசாலித்தனமான கூற்றாகவும் இருந்திருக்கும்.

'திருமலையில் ஒரு தமிழ் பல்கலைக் கழகம் நிறுவவேண்டும்' என்ற தமிழர்களின் ஏகோபித்த கோரிக்கைக்கு முட்டுக்கட்டை போடுவதற்கென்றே ஓர் இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையைத் தூக்கி முன் வைத்த கட்சி அல்லவா தமிழ் காங்கிரசுக் கட்சி?

தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக 'இந்துப் பல்கலைக் கழகம்' என்ற அற்ப கோரிக்கையைக் கூடக் கைவிடத் தயாரில்லாத தமிழ் காங்கிரசுக் கட்சியினர் எந்த முகத்தோடு தமிழரசுக் கட்சியைப் பார்த்துத் தமிழ் மக்களில் பெரும்பாலோரின் ஏகோபித்த கோரிக்கை ஒன்றைக் கைவிடும்படி கூறுகின்றார்கள்? இது எப்படி நியாயமாகும்? அப்படிக் கேட்பதற்குத்தான என்ன உரிமை இருக்கிறது அவர்களுக்கு?

திரு. சிவசிதம்பரம் அறிஞர் அண்ணாவுக்குத் தமிழ் மக்களிடையேயுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அதைத் திசை திருப்பும் நோக்கத்துடன் போலும் 'அறிஞர் அண்ணா திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டது போல் தமிழரசுக் கட்சியும் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட வேண்டும்' எனச் சொல்லி இருக்கிறார்?

'அறிஞர் அண்ணா திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டது போல்' என அரைச் சபாநயகர் பேசிய தன் மூலம் அவர் தன்னை அறியாமலே சமஷ்டி ஆட்சியின் சிறப்புக்குத் துதி பாடி விட்டார்.

ஆமாம், இந்தியத் துணைக் கண்டம் என்பது டில்லியில் மத்திய அரசைக் கொண்ட — பல மாநில அரசுகளை உடைய ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பேயாகும்! அந்த மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டுக்குத்தான் பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின் இப்பொழுது கலைஞர்

## இது புரியாமல் உளறிக்கொட்டுகிறரே உபசபாநாயகர்!

அறிஞர் அண்ணா திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டால் தமிழரசுக் கட்சியும் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமா? திராவிட நாடு கோரிக்கை சமஷ்டிக் கோரிக்கை போன்றதல்ல! சமஷ்டிக் கோரிக்கையும் திராவிட நாடு கோரிக்கை போன்றதல்ல! இந்த உண்மை எல்லாம் தமிழ் மக்களுக்கோ நவாலி மக்களுக்கோ தெரியாது என்று உடுப்பிட்டியார்தான் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்.

திராவிட நாடு கோரிக்கை போல் சமஷ்டிக் கோரிக்கையும் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டதல்ல. தமிழர்களுக்கு உரிமை கிடைத்து விடக் கூடாது என்பதற்காக சிங்களத் தலைவர்கள் சமஷ்டிக்கோரிக்கையைப் பிரிவினைக் கோரிக்கையாக மக்களுக்குத் திரித்துக் காட்டி அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி வருகிறார்கள் என்

கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்து வருகிறார் முன்பு இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நாடுகளைப் பிரித்துத் தனித் திராவிட நாடு அமைக்க வேண்டும் எனக் கூறிவந்த அண்ணா பின்னர் அந்தக் கோரிக்கையைக் கைவிட்டார் என்றால் அதன் பொருள் என்ன? அவர் பிரிவினைக் கோரிக்கையை விட சமஷ்டி அமைப்பிலேயே அதிக நம்பிக்கை வைத்துவிட்டார் என்பதல்லவா? அப்படியான ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பைத்தான் ஏற்படுத்த வேண்டும் என்கிறார்கள் தமிழரசுக் கட்சியினர்.

திரு. சிவசிதம்பரத்தின் யோசனைப்படி தமிழரசார் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டால் பின்னர் தமிழ் காங்கிரசுக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

**பொ. சண்முகநாதன்**

றால் அதற்குத்திரு. சிவசிதம்பரமா உடந்தையாக இருக்க வேண்டும்?

'சமஷ்டி' என்றால் அது பிரிவினை அல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தமது தனித் தன்மைகளை இழந்து விடாமல் அரசியல் உரிமைகள் பெற உதவும் ஒரே திட்டம் தான் அது என்றெல்லாம் எத்தனையோ தடவைகள் விளக்கியாகி விட்டது. உலகத்திலே இந்தியா உட்பட இருபதுக்கும் அதிகமான நாடுகளில் சமஷ்டி ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், அது ஒன்றும் தமிழரசுக் [illegible] டியார்கூட மறுக்கமுடியாது.

தமிழ் காங்கிரசுக்கட்சியைப் போல தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களை அரசியல் பாலைவனத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்கிறாரா உடுப்பிட்டியார்? இது தானா அவர் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் வருங்காலத்திட்டமா?

தமிழ் பற்றிப் பேசக் கூடாது; தமிழர் நலன் குறித்து மூச்சு விடக்கூடாது. இதற்கு தமிழரசுக் கட்சி சம்மதமென்றால் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக அவர்களோடு சேர்ந்து உழைக்கத் தயார்'' என்று கூட திரு. சிவசிதம்பரம் இனிமேல் கூறுவார் போலிருக்கிறது.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் போல்

(9ம் பக்கம் பார்க்க)

முதலாம் பதிப்பு விற்பனையாகிறது!
இரண்டாம் பதிப்பு வெளியாகிறது!

பளபளப்பான வண்ண அட்டை—பக்கங்கள் 150க்கு மேல்

தமிழர் காவியம் நிரப்பப் புறப்பட்ட
தலைவன் ஒருவனின் சாகாத சரித்திரம் இது.

### "அண்ணா—ஒரு நோக்கு"

ஆசிரியர் : ஜீவகாவின் பி. ஏ. (இலண்டன்)
மதிப்புரை : சிலம்புச்செல்வர் ம.பொ.சி. எம். எல். ஏ.

விலை : ரூபா 2-50

நூலின் உள்ளே...

"...இந்த நூல் இதுவரை அண்ணாவைப் பற்றி வெளிவந்த நூல்களிலே மிகவும் சிறந்ததென்று கூறுவேன். பெரிதும் உழைத்து இந்நூலை உருவாக்கி இருக்கிறார் ஆசிரியர். அண்ணாவின் புகழ் போல இந்நூலும் மணக்கிறது. தமிழகத்தின் முட்டரசியல் வரலாற்றுக் குறிப்புகள் இந்நூலில் குவிந்திருக்கின்றன..."
—ம. பொ. சி (மதிப்புரையில்)

"...உலகெங்கணும் பரந்திருக்கின்ற பகுத்துணரும் மக்களின் மன்றத்தில் இலங்கைவாழ் தமிழர்களின் பரிதாபகரமான நிலை எடுத்துரைக்கப்படல் வேண்டும்..."
—அண்ணா (1958 வகுப்புக்கலவரத்தின்போது)

கிடைக்குமிடம்:

கொழும்பில் : ஹிறீன்லண்ட்ஸ் ஹோட்டல், பம்பலப்பிட்டி,
ராஜேஸ்வரி பவான், கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்.
விஜயலட்சுமி புத்தக நிலையம், வெள்ளவத்தை.
வேல் முருகன் ஸ்ரோஸ், வெள்ளவத்தை.
மலர்விழி ஸ்ரோஸ், கதிரேசன் வீதி.
யாழ்ப்பாணம் : S. கிருஷ்ணசாமி, நியூஸ் ஏஜன்ட்,
33, பெரியகடை, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மலைநாட்டுப் பகுதிகளுக்கு விற்பனையாளர் தேவை. தகுந்த கமிஷன் தரப்படும்.

விபரங்களுக்கு எழுதவும்:

க. சுப்பிரமணியம்,
23, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4.
(விற்பனையால் வரும் இலாபம் தமிழ்ப்பணிக்கே)

## 'தினபதி' வெளியிடாத கடிதம்

ஆசிரியர்,
'தினபதி',
கொழும்பு.
அன்புள்ள ஐயா,

### தமிழரசு தலைவர் தொகுதி பாடசாலையில் சிங்கள வகுப்பு

இன்றைய 'தினபதி' யின் மேற்படி தலையங்கம் தொடர்பாக எழுதுவது.

குறிப்பிட்ட பாடசாலையில் ஆரம்பிக்கப் படவிருப்பதாகக் கூறப்படும் சிங்கள வகுப்புக்கள், அப்பகுதியிலுள்ள சிங்களப்பிள்ளைகளுக்காகவே ஆரம்பிக்கப் படுவதாக இருக்கும்போது, அதைப்பற்றித் தமிழ் பேசும் மக்கள் கிஞ்சித்தும் அச்சம் கொள்ளத் தேவையில்லையென்பதையும்; இந்த விடயத்திற்கு 'தினபதி' ஏன் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தது என்பதையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

சிங்களத் தொகுதிகளில் தமிழ்ப் பிள்ளைகளுக்காக நடத்தப்படும் தமிழ்ப் பாடசாலைகள் எவ்வாறு இயங்குகின்றனவோ அவ்விதமே தமிழ்த் தொகுதிகளிலுள்ள சிங்களப் பிள்ளைகளுக்காக நடத்தப்படவிருப்பதாகக் கூறப்படும் பாடசாலைகளை, தமிழ்த் தலைவர்களோ, தமிழ்ப் பேசும் மக்களோ ஆட்சேபிக்க நியாயமிருப்பதாகத் தெரியவில்லை.

தவிர, தென்னிலங்கைப் பகுதிகளிலுள்ள சிங்களப் பாடசாலைகளில் தமிழ்ப்பிள்ளைகளுக்கான தமிழ்ப் போதனை வகுப்புக்கள் முழு நேரமாக நடத்தப் பட்டு வருகின்றன. அதை அங்குள்ள அரசியற் தலைவர்களோ எவரும் இதுவரை ஆட்சேபித்துக் குரலெழுப்பவில்லை.

மேலும், 'தினபதி' குறிப்பிடும் இவ்வகையான பாடசாலைகள் தமிழ்ப் பகுதிகளில் இனிமேற்தான் தோன்றப் போகின்றன என்றும் கூறமுடியாது. ஏனெனில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரின் யாழ்ப்பாணத் தொகுதியிலேயே, சிங்கள மகா வித்தியாலயம் அதிகமான சிங்கள மாணவர்களுடன் பல வருடங்களுக்கு முன்பதாகவே தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்ப்பிரதேசங்களில், தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களபாட போதனை வலுக்கட்டாயமாகப் போதிக்கப்படுவதாகவிருந்தால் மட்டுமே தமிழ்த்தலைவர்கள் அதையிட்டு நடவடிக்கை எடுக்கக் காரணமிருக்கிறது.

ஆகவே, அன்புள்ள ஐயா! இந்தவிடயத்தில் 'தினபதி'க்குள்ள அக்கறை, அவசியமற்றது எனக் கருதுகிறேன். இதைவிட முக்கியத்துவங் கொடுத்துப் பிரசுரிக்கப் படவேண்டிய செய்திகள் பல உள.

தயவு செய்து இக்கடிதத்தை 'தினபதி' யில் பிரசுரித்து உதவவும்.

வணக்கம்

தங்கள் உண்மையுள்ள,

ம. பாலிலுப்பிள்ளை

17, நாவாந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
14, அக்டோபர் 1969.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்களுக்கு கைகொடுக்க வடக்கு கிழக்கு தமிழர்கள் முன்வரவேண்டும்!

## இந்தியா செல்லவிரும்புகிறவர்களை ஈழத்தில் தங்க வைப்பதற்கு இதுவே ஒரே வழி!




**வே. சுந்தரம்**
பதுளை

இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி தற்போது மலையக மக்கள் தமது கொள்கைகளை நிர்ணயிப்பதில் பெரிதும் முரண்பட்டு நிற்கின்றார்கள். இலங்கையிலிருப்பதா அன்றி இந்தியா செல்வதா? இதுவே ஒவ்வொருவரதும் கேள்வியாகும். சொத்துச் சுகமுள்ளவர் இவற்றையெல்லாம் தள்ளிவிட்டார்கள். ஆனால் இந்தியாவில் எவ்வித நிலைகளுமில்லாதவர்கள்-இலங்கையை விட்டுச் செல்வதற்கு முதற் காரணம் 58-ம் ஆண்டு சிங்கள துவேஷிகளின் விசமத்தனம்போல் மீண்டும் நேரலாமென்பதே. அதே சமயம் இவர்கள் இந்தியாவில் போய் என்ன செய்வதென்று தடுமாறுகிறார்கள்.

இவ்வித தடுமாற்றங் காரணமாக இன்றுவரை பெரும்பாலான மலையகத் தொழிலாளர்கள் இலங்கை பிரஜாவுரிமை வேண்டியோ அன்றி இந்தியப் பிரஜாவுரிமை வேண்டியோ மனுப்பண்ணவில்லை. இப்படியான அப்பாவி மக்களது தடுமாற்றத்தைத் தப்போக்கும் வழி இந்நாட்டரசாங்கத்திடமோ அன்றி இந்நாட்டரசியற் கட்சிகளிடமோ கிடையாது. பின் யாரிடமுள்ளது? இப்படியான சக்தி வடக்கு—கிழக்குத் தமிழர்களிடந்தானுள்ளது!

ஏற்கெனவே இலங்கைப் பிரஜையானவர்களிடம் "என்னப்பா! இலங்கை பிரஜை எடுத்துட்டியே, பின்னுலே சிங்களவங்க ஏதும் வெட்ட கொத்த வந்தா என்ன செய்யறது" என்று ஒரு கேள்வி கேட்டால் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் தெரியுமா? 'அப்படி ஏதும் வெட்டு கொத்துக்கு வந்தாங்கன, நமக்குத்தான் யாழ்ப்பாணத்துக்காரங்களும் மட்டக்களப்புக்காரங்களும் இருக்குறாங்களே!" என்று பளிச்சென்ற பதில் சொல்கிறார்கள். எனவே தங்களை முழுமூச்சாய் நம்பி இந்நாட்டில் நிலைத்திருக்க விரும்பும் மலையகத் தொழிலாளர்களுக்கு, வட கிழக்கு மாகாணத் தமிழர்கள் நிச்சயம் உதவி செய்ய வேண்டும்.

எந்த வகையில் உதவுவது? என்ற வினா எழும்ப நியாயமிருக்கின்றது. ஆனால் இந்நாட்டரசியல் பேச்சைப் பார்த்தால் இப்படியான கேள்வி தோன்றுதற்கிடமில்லை. வட கிழக்குத் தமிழர்கள் மலையக தொழிலாளர்களுக்கு வீடும் நிலமும் இனமாகக் கொடுக்க வேண்டாம். பணத்திற்குக் கொடுங்கள்; அதன்பின் அவர்களது உழைப்பின் அருமை தெரியும்.

"ஓ! எமதருமைத் தோட்டத்து மக்களே! உங்களுக்கு வேண்டிய நிலங்களுக்கு உடனே வடக்கேயும் கிழக்கேயும் வாருங்கள்! நமது உரிமைகளைப் பறிக்க முயலும் புல்லர்களின் மிரட்டலுக்கு எதிராகப் போராட எங்களோடு கை கொடுங்கள்!" என்று வடக்கேயும் கிழக்கேயும் இருந்து அழைப்புக்குரல் எழும்பட்டும். இக்கணமே இலங்கையைக் காலி பண்ணவிருக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் உடனே இலங்கையில் தங்கிவிடுவார்கள்!

இலங்கையில் தங்கவிருக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வட கிழக்கு மாகாணங்களிலுள்ள தனியார் தொழில் நிறுவனங்கள் தொழில் வாய்ப்பளிக்க முன்வர வேண்டும். வட கிழக்கு மாகாணங்களிலிருந்து மலையகத் தொழிலாளிக்காக முழு மூச்சான உரிமைக்குரல் எழும்பட்டும்; இந்த நாட்டின் நலனுக்காகத் தன்னுடல் பொருளாவியனைத்தையும் இழந்து மடிந்து மண்ணாய்ப் போய்க் கொண்டிருக்கும் மலையகத் தொழிலாளிக்காக வட கிழக்குத் தமிழர்கள் உரிமைக்குரலெழும்பட்டும்.

மலையகத் தொழிலாளர்களை ஆதரிப்பதால் வட கிழக்கு மாகாணங்களிலுள்ளவர்கள், மலையகத்தாரிடமிருந்து சாதி, மத பேதமற்ற உழைப்பை எதிர்பார்க்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக மலையகத்தாரை அன்பினால் விலைக்கு வாங்கிவிடலாம்! ஏனென்றால் மலையகத்தில் இயங்கிவரும் கட்சிகளின் கைப்பாவையாக இயங்கி வரும் தொழிலாளர்களை தன்வசமாக்குவது அவ்வளவு சிரமமான காரியமன்று! மலையகத்தாரை இயன்றளவு தன் வசமாக்க முயலும் வட கிழக்குத் தமிழர்கள், மலையகத்தவரை ஈழத்தரசியலை நோக்கி விழிப்புடையவர்களாக்க வேண்டும். ஏனென்றால் மலையகத்தில் இப்போது அறியாமை முற்றாக நீங்கிவிடவில்லை. தேங்கி நிற்பதை நீக்க ஈழத்தின் பழமையான பத்திரிகைகள் தனியான பக்கங்கள் ஒதுக்கி அரும்பாடுபட்டு வருகின்றன. இந்தப் பணியில் சுதந்திரன் வட கிழக்கு மாகாணங்களில் மலையகத்தாருக்காகத் தனது உரிமைக் குரலை இன்னும் பலமாக்க வேண்டும்.

# அண்ணாவின் அரசியல் பாதையின் அரிச்சுவடி உமக்குத் தெரியுமா?

## உபசபாநாயகருக்கு ஓர் பகிரங்கக் கடிதம்!

**'கலாநிதி தேவா'**

கடந்த 9-10-1969 வியாழக்கிழமை நவாலியில் நடைபெற்ற த.கா.பிரசாரக் கூட்டத்தில் த. அ. க. சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமெனக் கோரியுள்ளீரே, மிக்க மெச்சுகின்றேம் உம் மூளையின் திறனை!

அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேம். எமது அடிப்படைக் கொள்கை 'சமஷ்டி' 'சமஷ்டி' என்ற அத்திவாரத்தில் எமது கட்சியாகிய வீடு எழுந்துள்ளது. அதை எந்தத் தீய சக்தியாலும் அழிக்கவே முடியாது! எமது மூச்சாய கொள்கையைக் கைவிட்டு உமது கொள்கையற்ற கட்சி போன்று எமது கட்சியும் கொள்கையற்றதாக—உயிரற்றதாக இருப்பதை எந்த மானமுள்ள தமிழனும் விரும்பமாட்டான்!. பதவிக்காகப் பல்லிளிப்பவரல்லர் நாம்! உரிமைக்காகப் போராடுபவர்கள் ஐயா நாம். எமக்குப் பதவி வேண்டியதில்லை. உரிமைதான் வேண்டும். அதுவும் 'சமஷ்டி' என்ற அடிப்படையில் எழுந்த சம உரிமை!

நாம் எமது 'சமஷ்டிக்' கோரிக்கையை கைவிட்டால் திரிதோஷங்களாய உங்கள் மூவரது தலைகளும்தான் எம்முடன் சேருமென எண்ணுகிறீரா? அல்ல! ஏனைய சிங்களப் பிரதிநிதிகளும் எம் கூட நிற்பார்கள்! இதை எண்ணுதற்கு உமக்கு எங்கே ஐயா சித்தம் இருக்கிறது? நாம் எமது கொள்கையைக் கைவிட்டால் அடுத்த கணம் நடப்பது என்ன? சிங்கள முதலாளித்துவத்தின் முன் நாம் மண்டியிட்டு, வாய் புதைத்து—அவர்கள் காலால் விட்ட பணியை நாம் தலையால் செய்யவேண்டிய நிலை நிட்சயமாக ஏற்பட்டுத்தான் செய்யும். இன்றே அவர்களது அதிகாரம் ஓங்கி நிற்கும் போது நாமும் எமது கோரிக்கையைக் கைவிட்டால் நிலையென்ன? தட்டிக் கேட்க, ஆளில்லாட்டி தம்பி சண்டப்பிரசண்டம்' எனும் நிலை ஏற்பட்டு விடும்!

நாடாண்ட எம்மினம் நலிந்து—வலுவிழந்து—வளமிழந்து—ஆளுந்திறனிழந்து இருப்பது யாரால்? உம் போன்ற கோடரிக் காம்புகளால்! அன்றைய தமிழனின் சாபக் கேடாக எட்டப்பன், காக்கை வன்னியன் இருந்தனர். இன்றைய தமிழனின் சாபக் கேடாக நீரும் உமது இரு புண்டங்களும் இருக்கின்றீர்கள் என்பதை எந்த மானமுள்ள மறக் குலத் தமிழனும் உணர்வான்!

தமிழனுக்கு எந்தவகையில் என்ன வழியில் முன்னேற்றம் காணப் போகின்றீர்? படைத்த பாடசாலைப் பிரச்சினையில் த. அ. க. கூட்டிய மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திருந்தார்களே? அதற்குச் சமுகமளித்திருந்தீரா? அல்லது அதுபற்றி ஒரு வார்த்தைதானும் மூச்சுவிட்டுள்ளீரா? அதுதான் போகட்டும். இன்றைய பல்கலைக் கழகப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக த. அ. க. பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு மாநாடு கூட்டும்படி அறிவித்தல் கொடுத்திருந்தாரே உமக்கு! அதற்கு இன்றுவரை ஏதும் [illegible] தான் கொடுத்தீரா? உம்மை நீர் பெரிய [illegible] என எண்ணிக் கொண்டு, உமது அரசியலறிவற்ற தன்மையை காட்டிவிட்டீர்!

தமிழர் அனைவரும் ஏகோபித்துக் குரலெழுப்பித் தம் பிரதேசத்திற்கு வேண்டியதை ஆட்சியாளரிடம் பெற்றுக் கொள்வதற்குப் பதில் - முப் பெரும் அரசியல் மூடர்களாய நீவிர் 'ஜேயல் கமிஷனை' ஆதரித்துள்ளீர்கள்? இப்படிப் பட்ட நீரா தமிழன் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கப் போகின்றீர்? உமது தேர்தற் தந்திரம் இனி மேலும் மானமுள்ள எந்தத் தமிழனிடத்திலும் பலிக்க முடியவே முடியாது.

கடந்த 65ம் ஆண்டுத் தேர்தலின் பின் உமது கட்சிப் பிரதிநிதிகளாய முத்தோஷங்களும் என்ன சொல்லி அரசாங்கத்துடன் சேர்ந்தீர்கள்? மூன்று மாதங்களுள் உரிமைகளைப் பெற்றுத் தராவிடில் அரசாங்கத்திலின்றும் வெளியேறுவோம் என்றீர்களே? இப்போ எத்தனை மூன்று மாதங்களை ஏப்பம் விட்டுள்ளீர்கள்? அல்லது இன்னமும் உங்கட்கு மூன்று மாதங்கள் வரவில்லையா?

—அறிஞர் அண்ணா திராவிடக் கோரிக்கையைக் கைவிட்டதுபோல் எனக் கூறியுள்ளீர் உண்மையிலேயே உமக்கு அண்ணாவின் அரசியல் பாதை என்ன என்பதன் முதல் அடி கூடத் தெரியுமா? தெரிந்திருந்தால் அண்ணா திராவிடக் கோரிக்கையைக் கைவிட்டது போன்று நாமும் [illegible] கைவிட வேண்டுமெனக் [illegible] அண்ணா திராவிடநாட்டுப் பிரிவினையைத்தான் கைவிட்டாரேயன்றித் தனது கொள்கையாய சமதர்மத்தைக் கைவிட்டாரா? நாம் கேட்பதும் சமஷ்டி ஆட்சி - அதாவது அண்ணா வழி சமத்துவம் - சமதர்மம் - சகோதரத்துவம் என்பவையே! அதாவது எல்லோருக்கும் சம உரிமை வேண்டும் என்பதே! சமஷ்டி ஆட்சி ஏற்பட்டால்தான் நம் நாடு சுபீட்சமடையும்! ஒற்றையாட்சியில் என்றும் ஒற்றுமை நிலவவே முடியாது ஏன் அதிகம்? உலக சாம்பிராச்சிய மாநாட்டிலும் இலங்கைப் பிரதமர் என்ன கூறினார்? 'உலக நாடுகளின் சுபீட்சத்திற்குச் சமஷ்டி ஆட்சியே சிறந்தது' என்று சிம்ம கர்ஜனை செய்தாரே. எனவே இதிலிருந்து உணர முடிகிறதே என்றாவது ஒரு நாள் நமக்கும் 'சமஷ்டி' ஆட்சி ஏற்படத்தான் போகின்றதென்று! இதுவரை புரியாதிருந்தால் இனிமேலாகுதல் புரிந்து கொள்ளும்.

இறுதியாக உமக்கு ஒரு வேண்டுகோள்!

இன்னமும் காலம் கெட்டுவிடவில்லை! உண்மையாக நீர் தமிழனது முன்னேற்றத்திற்காக உழைப்பவராக இருந்தால் - மானமுள்ள மறக்குடித் தமிழனாக இருந்தால் - மறக்குடி மக்களின் பிரதிநிதியாக இருந்தால் - இன்றே - இப்பொழுதே - இக்கணமே - அரசாங்கத்தை விட்டு வெளியேறி தமிழன் உரிமையை நிலைநாட்டச் சாத்வீகப் போராட்டத்தில் குதிக்க வேண்டும்!

முடியுமா உம்மால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்திய உடன்படிக்கைச் சட்டத்தில்

# கட்டாய நாடுகடத்தலுக்கு இடமுண்டெனு நிரூபிக்கமுடியுமா?

சிறிமா—சாத்திரி உடன்படிக்கை நடை முறைச் சட்டத்தில் கட்டாய நாடு கடத்தலுக்கு இடமிருக்கின்றதென்பதை திரு. வி. நவரத்தினம் நிரூபித்தால் நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கிறேன் எனப் பலமுறைபகிரங்கமாக அவருக்குக் கூறிவிட்டேன். மீண்டும் அதையே இங்கு சவால் விட்டுக் கூறவிரும்புகிறேன்'

—இவ்வாறு திரு. வி. தர்மலிங்கம் பா. உ. அல்லைப்பிட்டியில் கிளிநொச்சி பா. உ. வும், ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழரசு வேட்பாளருமான பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## நிரூபித்தால் பதவியை துறக்க நான் தயார்!

## நவரத்தினத்துக்கு உடுவில் எம். பி. பகிரங்கச் சவால்!



அல்லைப்பிட்டி கிராம சபைத் தலைவர் திரு. பாலவிநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசும் போது கூறியதாவது:

''முன்னர் மாற்றுக் கட்சியினை ஆதரித்த அன்பர்களும் தமிழரசுக்கட்சியினருடன் சேர்ந்து இந்த வரவேற்பை நல்கி எனக்குத் தங்கள் அன்பையும் ஆதரவையும் காட்டியமைக்கு என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் ஏன் இங்கு போட்டியிட வரவேண்டும் என்று நவரத்தினத்தின் பேச்சாளர் சிலர் கேட்கிறார்கள். அவர்கள் தோல்வியை ஏற்றுக்கொண்டமையாலேயே என்னை மட்டும் இக் கேள்வியை ஆத்திரத்துடனும் ஆவேசத்துடனும் கேட்கிறார்கள்.

### ஆகாயக் கோட்டை

நான் போட்டியிட வராவிட்டால் நவரத்தினம் வெல்லக் கூடும் என்று இவர்கள் ஆகாயக் கோட்டை கட்டினார்கள். நான் போட்டியிட வந்தவுடன்—எங்கும் எனக்கு மக்கள் பேராதரவு தருவதை கண்டவுடன்—தாங்கள் கட்டிய ஆகாயக் கோட்டை கூடத் தகர்ந்து போவதை அவர்கள் காண்கிறார்கள். இதனால், என்னைத் தூற்றுகிறார்கள்; வசைபாடுகின்றார்கள்; தங்கள் ஆத்திரம் தீர பொய்யையும் புரட்டையும் கட்டவிழ்த்து விடுகின்றார்கள்.

எனக்கு உள்ள பட்டங்களைக் கண்டு பொறுமை கொண்டு பல பட்டங்களை வாரி வழங்குகின்றார்கள். இவர்களுக்கு நன்றி கூறுவோம். இன்னும் எதனைக் கூறவிரும்பினும் எத்தனை பட்டங்களைத் தர விரும்பினும் தாராளமாகச் செய்ய அவர்களை விட்டுவிடுவோம்.

### மட்டந் தட்டினர்

1965-ம் ஆண்டிலே நான் கிளிநொச்சித் தொகுதியிலே போட்டியிட்ட பொழுது எனக்குப் பட்டங்களைக் கட்டினவர்களை மக்கள் மட்டந் தட்டிவிட்டார்கள். இன்று அவர்களில் சிலர் கிளிநொச்சித் தொகுதிக்கு வரவே பயந்துவிட்டார்கள். நான் உண்மையிலும் உழைப்பிலும் உறுதியிலும் நம்பிக்கை உடையவன். என்னிடத்தில் உண்மை உண்டா உறுதி உண்டா உழைப்பு உண்டா என்பதைப் பொதுமக்களாகிய நீங்கள் தீர்மானித்தால் போதும்.

### சோதனை

சென்ற தேர்தலிலே கிளிநொச்சித் தொகுதியிலே எங்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட திரு. சிவசுந்தரத்துடன் போட்டியிடவேண்டியிருந்தது. இம்முறை ஊர்காவற்றுறைத் தொகுதியிலே எங்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட திரு. நவரத்தினத்துடன் போட்டியிட வேண்டியுளது. கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்களுடன் போட்டியிடும் நிலைமையிலேதான் எனது தேர்தல் போட்டிகள் அமைந்துவிடுகின்றன. இது எனக்கு ஒரு சோதனையாகவும் ஆகுகின்றது.

திரு. நவரத்தினம் அவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டபொழுது அவரைக் கட்சியில் மீண்டுஞ் சேர்க்கப் பலர் முயன்றனர். அது முடியாமற் போகவே அவரிடம் சில சலுகைகளைப் பெற்றவர்கள் அவருக்கு மாறாகத் தமிழரசுக் கட்சி எவரையும் போட்டியிடுதற்கு நிறுத்தக்கூடாது என்று கதை அளந்தனர். என்னைப் போட்டியிடத் தமிழரசுக்கட்சி நிறுத்தினவுடன் என் மீது எரிந்து விழுகின்றார்கள்; வாயாரத் திட்டுகின்றார்கள். என்னைத் திட்டுவதால் சுயாட்சிபெறலாம் என்று எண்ணுகிறார்கள் இந்த அரசியல் ஞானிகள்.

### புதுக் கட்சி

கட்சியிலிருந்து விலக்கப்பட்டவுடன திரு. நவரத்தினம் தாமே கட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் என்றுகதறி வந்தார். கட்சிக் கொள்கையினை உறுதியாகக் கடைப்பிடிக்கும் என்னை அநியாயமாக விலத்தலாமா என்று அழுது வந்தார். இப்பொழுது புதுக் கட்சி ஒன்றினைத் தொடங்கிவிட்டார். அவருடைய தமிழரசுக்கட்சிக் கொள்கைப்பிடிப்பும் உறுதியும் எங்கே போய் விட்டன?



தமிழரசுக்கட்சிவேட்பாளராகப் போட்டியிட்ட பொழுது திரு. நவரத்தினம் தாம் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்கு மாறாக நடந்தால் கட்டுப்பாட்டுக்கு அமையாவிடின் தமிழரசுக் கட்சியை எதிர்ப்பின் பாராளுமன்றப் பதவியைத் துறப்பதற்கு உடன்பட்டு கட்டுப்பட்டுக் கையொப்பமிட்டு எழுதிக் கொடுத்த உறுதிப் பத்திரத்திற்கேற்ப புதுக் கட்சியைத் தொடங்கிய பின்



வரும் தமது பாராளுமன்றப் பதவியைத் துறவாதது ஏன்? கையெழுத்திட்டு உறுதிப்படுத்தியதன்படி நடவாத எவரிடமேனும் உறுதி உண்டா? நேர்மை உண்டா. உண்மை உண்டா? வீரம் உண்டா? இதனைப் பொது மக்கள் சிந்திக்க வேண்டும்!

இப்பொழுது திரு. நவரத்தினம் நடத்தும் விடுதலை அவரை வீராதி வீரனுக்கும் விடுதலை முன்னர் திரு. நவரத்தினத்தை 'முதுகு எலும்பில்லாதவர்' 'கோழை' என [illegible] இன்று [illegible] பரிதாபத்துக்குரியது!

## சங்கப் பலகை

### சிரித்திரன்

(5 வது ஆண்டு மலர்)

விலை—ரூபா: ஒன்று

ஈழத்தில் ஒரு தமிழ்ப் பத்திரிகையை நடத்துவதென்பது அம்புலிக்கு போய் வருவதைவிட சிரமமான காரியம் என்பதை பத்திரிகைத் துறையில் சற்று அனுபவப்பட்டவர் எவரும் மறுக்க மாட்டார்கள். வீட்டைக் கட்டிப்பார், கலியாணத்தை செய்துபார் என்பதுடன் சேர்த்து (இலங்கையில்) தமிழ் ஏட்டை நடத்திப்பார் என்று ஒரு புது மொழியையும் சேர்க்கலாம். ஈழத்தில் பத்திரிகை நடத்துவதென்பது அந்த அளவுக்கு கஷ்டமும் நஷ்டமுமுடைய செயலாகும்.

இந்த நிலையில் நகைச் சுவைக்கென்றே சிரித்திரன் என்றோர் ஏட்டினை ஆரம்பித்து துணிவுடன் நடத்தி அதன் 5 வது ஆண்டு மலரையும் வெளியிட்டுவிட்ட திரு. சிவஞானசுந்தரம் அவர்களை இத்துறையில் ஓர் ஜாம்பவான் என்றுதான் கூறவேண்டும்.

மற்றவர்களைச் சிரிக்கவைப்பதே ஒரு கஷ்டமானவேலை. அதுவும் கருத்துடன் கலந்த நகைச் சுவைகளைக் கொடுத்து சிந்திக்கவைத்து சமுதாய ஊழல்களை ஒழிக்கப் பணியாற்றுவது மாபெரும் தொண்டாகும். சிரித்திரன் அந்தப் பணியைத் தான் செய்து வருகிறது.

போலிக்காந்தி பக்தர்களை கிண்டல் செய்யும் நகைச் சுவைத் துணுக்கொன்றை அட்டையில் தாங்கி மலர்ந்துள்ள சிரித்திரன் ஆண்டு மலர், ஒவ்வொரு பக்கமும் மலர்ந்து மணம் பரப்புகிறது. பக்கத்துக்குப் பக்கம், சிந்தனையைத் தூண்டி சிரிக்க வைக்கும் கார்ட்டூன்கள் நகைச் சுவை துணுக்குகள், கதைகள் கட்டுரைகள், எல்லாமாக நிறைந்துள்ள சிரித்திரன் மலர் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையுமே உற்சாகமளிக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை.

—'மகேசன்'

### உடுவில் பா. உ. சவால்

உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் பேசும் பொழுது கூறியதாவது:-

சிறீமா சாஸ்திரி உடன்படிக்கை நடைமுறைச் சட்டத்திலே கட்டாயநாடுகடத்தல் இருக்கின்றது என்பதை திரு. வ. நவரத்தினம் நிரூபித்தால் நான் எனது பாராளுமன்றப் பதவியைத் துறக்கின்றேன் எனப் பலமுறை அவருக்குச் சவால்விட்டேன மீண்டும் இன்று இங்குசவால் விடுகின்றேன்.

புறக்கிராசி நவரத்தினத்திலும் பார்க்க டாக்டர் கொல்வின் சில்வா சட்டம் நன்கு தெரிந்தவர் என்பதை நவரத்தினமும் ஏற்றுக்கொள்வார். கொல்வின் பாராளுமன்றத்திலே வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது இதனை எடுத்துக் கூறியுள்ளார். திரு நவரத்தினம் பாராளுமன்றத்துக்கு வருவதை இப்பொழுது குறைத்து விட்டமையால் கொல்வின் பேசும் பொழுது அவர் அங்கிருக்கவில்லை.

### இவரா போராடுவார்

எங்கள் கட்சி அரசாங்கத்தை விட்டு விலகிய பின்பு சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களித்தோம் ஆனால் திரு. நவரத்தினம் ஒரு முறையாகுதல் எதிர்த்து வாக்களிக்கவில்லை. வாக்களிக்கும் நேரத்தில் அவர் மெல்ல நழுவி விடுகிறார் என நண்பர்கள் கூறுவதுண்டு. இப்படி அரசாங்கத்துக்கு நல்ல பிள்ளையாக நடித்துச் சில சலுகைகளைப் பெறமுயலும் இவரா சுயாட்சிக்குப் போராடப் போகின்றார். சிந்தித்துப் பாருங்கள்!

### ஆலாலு பேச்சு

வழக்குரைஞர் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள் பேசும் பொழுது 'தமிழரசுக் கட்சியிலிருந்து திரு. நவரத்தினம் மட்டும் விலக்கப்படவில்லை. தமிழரசுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்ற உறுப்பினர் தான் நவரத்தினம் ஏழு பேரும் புதுக் கட்சி தொடங்கவில்லை. இவர் மட்டும் தொடங்கியிருக்கின்றார் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தட்டுப் பட்டார்கள். இவரும் தட்டுப்படுவார். இது புதுமையல்ல. வரலாற்று உண்மை' என்று கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது: திருவாளர் நவரத்தினத்தை ஆட்டிவைக்கும் இரு சக்திகள் எப்பொழுதோ நவரத்தினத்தைத் தமிழரசுக் கட்சியிலிருந்து பிரியுமாறு கேட்டன. அவரும் அதற்கு உடன்பட்டு ஆயத்தமாக இருந்தார். ஆனால் தாமாக விலகாமல் கட்சியால் விலக்கப்படுதற்கு விரும்பினார். தாமாக விலகியிருந்தால் மக்களின் அனுதாபத்தைச் சிறிதேனும் பெறமுடியாது. விலக்கப்பட்டால் மக்கள் இரங்குவர் என்றெண்ணினார். ஆனால் இன்று மக்கள் உண்மையை உணர்ந்து விட்டனர்!

திருவாளர்கள் ஆ. சந்திரசேகரம் (வேலணை), நா. க. தருமலிங்கம் (நெடுந்தீவு), க. சுப்பிரமணியம் (அனலைதீவு), க. சேதுராமன் (அல்லைப்பிட்டி), அமிர்தலிங்கம் (மண்டைதீவு), முதலியபலர் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டை குழப்புவது யார்?

இந்துக்களுக்கு ஓர் கலாசார பல்கலைக் கழகம் வேண்டும் என்று கூப்பாடு எழுப்பி தமிழ் பேசும் மக்களை மத அடிப்படையில் இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்று கூறுபோட முயற்சிக்கிறது தமிழ் காங்கிரஸ்.

இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்ற மத பேதமின்றித் தமிழ் பேசும் மக்களுக்கு இன அடிப்படையில் ஓர் பூரணத்துவமுள்ள பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்று வாதாடுகிறது தமிழரசுக் கட்சி!

இந்துப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்பட வேண்டுமென்று கூக்குரலெழுப்பித் தமிழ் பேசும் மக்களைப் பிரதேச அடிப்படையில் பிரிக்க முயலுகிறது தமிழ் காங்கிரஸ்!

தமிழ்ப் பிரதேசங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் ஓரிடத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான பல்கலைக் கழகத்தின் தலைமைப் பகுதி நிறுவப்பட வேண்டுமென்று கூறுகிறது தமிழரசுக் கட்சி!

தமிழ் காங்கிரஸ் கேட்கும் இந்துப் பல்கலைக் கழகத்தில் இந்து சமய சாத்திரங்களே போதிக்கப்படும்!

தமிழரசுக் கட்சி கோரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலோ விஞ்ஞானம், பொறியியல், கலை, வைத்தியம் போன்ற நவீன கல்வித் துறைகள் அனைத்தும் போதிக்கப்படும்!

தமிழ் காங்கிரசின் இந்துப் பல்கலைக் கழகத்தில் இந்துமதமல்லாத ஏனைய மதங்களுக்கு இடம் இருக்க மாட்டாது!

தமிழரசுக்கட்சி கோரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலோ, இந்துமதத் துறைக்குச் சிறப்பான பீடம் ஏற்படுத்தப்படுவதுடன், ஏனைய மதங்களுக்கும் உரிய இடம் அளிக்கப்படும்!

இந்து சமய வளர்ச்சிக்கு செலவிடுவதற்கு எனச் சைவப் பெரியார்கள் விட்டுச் சென்ற சொத்துக்களை கொண்டு பல்கலைக் கழகத்தை நிர்வகிக்க வேண்டுமென்கிறது தமிழ் காங்கிரஸ்!

அரசாங்கம் தனது நிதியிலேயே தமிழ் மக்களுக்கான பல்கலைக் கழகத்தை நிறுவி நிர்வகிக்க வேண்டுமென்று கோருகிறது தமிழரசுக் கட்சி!

வட மாநிலத்தில் இந்து மகளிருக்கு உள்ள சிறந்த கல்லூரியாக விளங்கும் இராமநாதன் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் மூடி விட்டு அங்கு இந்து பல்கலைக் கலைக்கழகத்தை நிறுவலாம் என்கிறது தமிழ் காங்கிரஸ்.

வட மாநிலத்தில் உள்ள எந்தக் கல்லூரியையும் மூடாது புதியதோர் பல்கலைக் கழகத்துக்கான கட்டடத்தை தமிழ்ப் பிரதேசத்தில் நிறுவ வேண்டுமென்கிறது தமிழரசு!

தமிழ் காங்கிரசு, 1965ம் ஆண்டுக்குப் பின்பே இந்துப் பல்கலைக் கழகக் கூச்சலை எழுப்ப ஆரம்பித்தது!

தமிழரசுக் கட்சியோ, 1956ம் ஆண்டிலிருந்தே தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்காக போராடி வருகிறது! எனவே,

தமிழ் பேசும் மக்களுக்கான பல்கலைக் கழகப் பிரச்சினையில் குட்டையைக் குழப்புவது யார்? குதர்க்கம் பேசுவது யார்?

தமிழ் பேசும் மக்களே சற்று சிந்திப்பீர்!

—'கோவை'

## வங்கப்புயலென

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எமது உதவியைக் கோரியது. இதனால் எமது உரிமைகளைத் தருவதாக ஒப்பந்தம் செய்ததின் பின்பே நாம் சேர்ந்து கொண்டோம்!

நாம் அப்படியாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பயனாகவே, 1956ல் தமிழுக்கு இருந்த உரிமைகளை விட, 1966ல் தமிழுக்கு அதிக உரிமை கிடைத்துள்ளது. இந்த உண்மையை இன்று எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதற்கு மேலும் சான்றாக அண்மையில் எமது மகாநாட்டிற்கு வந்த, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சிவஞானகிராமணியார், தமிழ் நாட்டில், தமிழுக்கு உள்ள உரிமைகளையும், இன்று இலங்கையில் தமிழர்களுக்கு உள்ள தமிழ் உரிமைகளையும் பற்றி, கூறுகையில், இலங்கையில் தான் உரிமைகள் அதிகமுள்ளதாகக் கூறியுள்ளார். இதை தனது 'செங்கோல்' ஏட்டிலும் எழுதியுள்ளார்.

அடுத்து வேதக்கேணி வட்டார தமிழரசு வாலிப முன்னணிக் கிளையின் உத்தியோகத்தர்களாக கீழ் காண்போர் தெரிவு செய்ய பட்டனர். தலைவர் எஸ். முத்துலிங்கம், உப தலைவர் திரு. செ. பரமலிங்கம், செயலாளர் திரு. நா. அரியரத்தினம், உப செயலாளர் திரு. த. புவனேந்திரன், பொருளாளர் திரு. ப. சேனாதிராஜா. ஆகியோருடன் 9 பேர் கொண்ட ஒரு செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.—

## இன்று பௌர்ணமி கலைவிழா

இன்று (25.10.69) மாலை 6.30க்கு யாழ் திறந்த வெளி அரங்கில் யாழ், மாநகராட்சியமன்றத்தின் பௌர்ணமி நாள் கலைவிழா நடைபெறுகிறது. பல்வேறு, கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

## இலக்கிய உலகு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வன். எனவே 7 வது சிந்தனைக்கும் வேறு உதாரணங்கள் வேண்டாம்.

அடியேன் பெரியவன், ஒழுக்கசீலன், சட்டங்களின் பப்பா. 8-வது சிந்தனை என்னைப்பற்றியதே.

பத்தாவதைத்தான் பாருங்களேன். இவை எப்படித்தான் சாகாத வரங்களாகின்றனவோ?

வரம் நானே கேள்வி கேட்டு பதிலும் சொல்வதில் வந்துவிட்டது. ஆமாம் என் வினாக்களுக்குத்தான் நான் விடையளிக்கிறேன். அது மட்டுமா என்னைப் பற்றி தனித்துவத்தை, பரிணைத்தை எல்லாம் பற்றி நானேதான் எழுதுகிறேன். இதை நீங்கள் சத்தியமாக நம்பவேண்டும்.

எனவே...

ஆமாம்! நானே கோழை! நான்தான் உண்மையான கோழை. என்னை மன்னித்து விடுங்கள்.

ஏன் என்று கேட்காதீர்கள். ஆறுதல் சொல்லவராதீர்கள்! அவை தமிழனுக்கே உரித்தான போக்கிலித்தனங்கள் என்பதால். [illegible]

## அம்பிப்பாடல் வெளியீட்டு விழா

கவிஞர் அம்பிகைபாகனின் குழந்தைப் பாடல்களின் தொகுப்பான 'அம்பிப் பாடல்' வெளியீட்டு விழா இன்று மாலை (25.10.69 பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறுகிறது. திரு. க. செ. நடராசா, கைலாசபதி, இ. இரத்தினம் ஆகியோர் நூலை விமர்சிக்கிறார்கள். அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அசீஸ் தலைமை தாங்குகிறார். இறுதியில் லடிஸ் வீரமணியின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## 'கோவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறி கொள்கை இழந்து கோலம் மாறி நடுத் தெருவில் நிற்கும் நவரத்தினம் கும்பல் வன்முறையைக் கட்டவிழ்ந்து விடுவதன் மூலம் தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளலாம் என்று கனவு கண்டு வருகின்றார்கள்.

மண்டைதீவுத் தமிழரசுக் கூட்டத்தில் நவரத்தினத்தின் ஆதரவாளர்களால் காருக்கு ஆணி வைக்கப்பட்டதும் நயினா [illegible] த்தைக் குழப்ப முயன்றதும் [illegible].

# சுதந்திரன் சொன்னதை வீரகேசரி ஒப்புக்கொண்டது!

பொய் பித்தலாட்டம் கலந்த செய்திகளைத் தயாரித்து வெளியிடுவதில் தினபதி ஆசிரியருக்கு நிகர் தினபதி ஆசிரியரே. தமிழரசுக் கட்சிக்கு எதிராக படு போக்கிரித்தனமான பொய் மூட்டைகளைத் தினபதி அவ்வப்போது தயாரித்து வெளியிடும்போதெல்லாம் அவற்றை அம்பலமாக்கி 'தினபதி'யின் சுயரூபத்தை வாசகர்களுக்கு சுதந்திரன் அம்பலப்படுத்தி வந்திருக்கிறது.

தமிழரசுக் கட்சிக்குள் சிண்டு முடியவும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உடைத்தெறியவும் தினபதி படாதபாடு பட்டு வருகிறது. பத்திரிகை உலகில் தினபதியின் பாத்தைத்தனத்தை முதன் முதலில் அம்பலப்படுத்திய பெருமை சுதந்திரனுக்கே உண்டு.

'தினபதி' பற்றி சுதந்திரன் வெளியிட்டு வந்த கருத்துக்களை ஈழத்தின் மூத்த தமிழ் தினசரிகளில் ஒன்றான வீரகேசரியும் இப்போது ஒப்புக் கொண்டுவிட்டது.

கீழ்த்தரமானது, விஷமத்தனமானது, சில விஷயங்களை கற்பித்து பத்திரிகா தர்மத்துக்கே மாசு ஏற்படுத்துவது, இப்படியெல்லாம் தினபதிக்கு பட்டமளித்து தினபதியின் சுயரூபத்தை அம்பலமாக்கியிருக்கிறது வீரகேசரி.

சுதந்திரன் சுட்டிக் காட்டி வந்ததை வீரகேசரியும் இப்போது ஏற்றுக்கொண்டுவிட்டது.

## இராசலிங்கத்தை செனட்டராக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியாக திரு. இராசலிங்கத்தை தெரிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சி தான் ஆரம்ப முதலே நடவடிக்கை யெடுத்து வந்தது.

கடந்த முதலைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி பா. உ. க்கள் அரசாங்கத்துக்கு சார்பாக வாக்களித்திருந்ததால், இம் முறை தமிழரசு ஆதரவுடன் போட்டியிடும் திரு. இராசலிங்கத்துக்கு அரசாங்கம் ஆதரவு தர வேண்டும் என பிரதமரை டாக்டர் நாகநாதன் ஆரம்பத்திலேயே கேட்டுக் கொண்டார்.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறி விட்டதால் அப்படிச் செய்ய முடியாது எனப் பிரதமர் கைவிரிக்கவே, திரு. இராசலிங்கத்துக்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதில் தமிழரசுக் கட்சி ஈடுபட்டிருந்தது. ஆர். ஜி. சேனநாயகா, எஸ். டி. பண்டாரநாயகா போன்றவர்களும் திரு. இராசலிங்கத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் இப் பிரச்சினை மீது அக்கறை காட்டாது மௌனம் சாதித்து வந்த திரு. பொன்னம்பலம், அரசாங்கப் பாராளுமன்றக் குழுவுக்கு கடைசி நேரத்தில் இதைக் கொண்டுவந்தார்.

திரு. பொன்னம்பலத்துக்கு அரசாங்க கட்சியில் செல்வாக்கு இருந்தால் அரசாங்கச் சார்பாக தேர்தலில் போட்டியிட்டவருள் ஒருவராக திரு. இராசலிங்கத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்வதில் வெற்றி கண்டிருக்க வேண்டும். ஆனால் அந்த அளவுக்கு அவருக்கு அங்கே செல்வாக்கில்லை.

அரசாங்கக் கட்சியினர் தமது நான்காவது விருப்பு வாக்காக திரு. இராசலிங்கத்துக்கு வாக்களிக்க வேண்டுமென்று திரு. பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்ததாகவும், அதற்கு குழு இசைந்ததாகவும் கூறப்படுவது ஒரு பெரிய புருடா என வர்ணிக்கப்படுகிறது.

அரசாங்கப் பாராளுமன்றக் குழுவிலுள்ளவர்களுக்கு இருக்கும் சக்தி வாய்ந்த வாக்குகள் ஆக மூன்றே மூன்று வாக்குகள் தான்; அம் மூன்றையும் அரசாங்கத்தின் சார்பில் போட்டியிடும் மூவருக்கும் அளிக்க அவர்கள் கடமைப் பட்டவர்கள். இந்நிலையில் பயனற்ற நாலாவது வாக்கினால் இராசலிங்கத்துக்கு என்ன பிரயோசனம்?

சிறுபான்மைத் தமிழருக்கு தாம் ஏதோ நன்மை செய்வதுபோலக் காட்டுவதற்கு திரு. பொன்னம்பலம் கையாண்ட ஓர் தந்திரமிது என்று கூறப்படுகிறது.

தமக்குப்புகழ் தேடவும்" சிறுபான்மைத் தமிழ் மக்களை ஏமாற்றவும் திரு. பொன்னம்பலம் கையாண்ட இத் தந்திரத்தால், திரு. இராசலிங்கத்துக்கு ஆதரவு தர முன்வந்த சில எதிர்க் கட்சி எம். பீக்கள்கூட, திரு. இராசலிங்கம் அரசாங்க ஆதரவு வேட்பாளராக போட்டியிடுவதாக செய்தி வந்ததால் இறுதி நேரத்தில் தமது ஆதரவைத் தர மறுத்து விட்டனர். என்று தெரிகிறது.

## முனைச்சிவ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தமிழரசுக் கட்சிதான் தமிழர் நலன்களுக்காக உழைத்து வருகிறது. இந்த உண்மையை உடுப்பிட்டியாரும் ஒப்புக் கொண்டு அறிஞர் அண்ணாவையும் தமிழரசுக் கட்சியையும் ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார் அந்த அளவில், அதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

## 'கவிப் முடிவுகள்'

வாசக நேயர்கள்
பல்லோரது
வேண்டுகோளை
திருப்திப் படுத்தும்
நோக்குடன்
அடுத்த வாரத்திலிருந்து
'கவிப் முடிவுகள்'
சுதந்திரனில்
இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கள்வரை மதியாத நான் செல்வாவை மதிக்கிறேன்'

—வி. பொன்னம்பலம்

'நான் கள்வரை மதித்ததுமில்லை; மதிக்கவும் மாட்டேன்: ஆனால் திரு. செல்வநாயகத்தை அன்றும் மதித்தேன்; இன்றும் மதிக்கிறேன்'

—இவ்வாறு யாழ்ப்பாணம் அண்ணா சொற்பயிற்சி மன்றத்தில் உரையாற்றிய திரு வி. பொன்னம்பலம் எம். ஏ. தெரிவித்தார்.

எப்படி பேச ஆரம்பித்தேன் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய திரு. வி. பொன்னம்பலம் தனது 17 ம் வயதிலேயே திரு. செல்வநாயகத்துக்கு ஆதரவாக தமிழ் காங்கிரஸ் மேடையில் பேச ஆரம்பித்து விட்டதாகவும் தெரிவித்தார்.

# நிலையான கொள்கையுடையது தமிழரசுக் கட்சியொன்றே!

## கைதடியில் நவம் பேச்சு!

"தமிழ் பேசும் மக்களின் எதிர்கால அரசியல் இளைஞர் சமூகத்தின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. ஆகவே அரசியலை ஆழமாகச் சிந்தித்து வருங்காலத்தில் அரசியலைச் சரியான வழியில் இட்டுச் செல்ல வேண்டியது எம் இளைய சமுதாயத்தினது கடமை. இத்துறையில் எம் இளைய சமுதாயம் இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன? என்று இருக்காது தீர்க்க தரிசனத்துடன் இயங்க முன்வரல் வேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் கைதடி மூத்த நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய பொழுது கூறினார்.

திரு. கா. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வ. ந. நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தமட்டில் மேடைகளில் தனிப்பட்ட ஒருவரை திட்டியோ, இல்லாத பொய்களைக்கூறி மக்களை ஏமாற்றியோ அரசியலை நடாத்த வேண்டிய அவசியம் இல்லை. தமிழரசுக் கட்சி, மக்கள் கட்சி. அதற்கென கொள்கை உண்டு. இலட்சிய வழிகள் உண்டு. இதனை இளைய சமுதாயத்தினர் நன்குணர்ந்து இயக்க ரீதியில் ஆதரவு அளிக்க முன்வரல் வேண்டும்."

வாலிப முன்னணியைச் சேர்ந்த திரு. அ. கணேசலிங்கம் பேசுகையில் "தொகுதி அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட திருவாளர் பொன்னம்பலம் அவ்வாத்திரத்தில் யாழ் முற்ற வெளியில் கூட்டம் போட்டு சிங்கள அரசியல் வாதிகளிடமிருந்து தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை போராடிப் பெறுவதற்கு தயார் என்று கூறினர். ஆனால் இதுவரை காலத்திலும் இனத்தின் உரிமைகளைப் பெறுவதற்கு பொன்னம்பலம் போராட்டம் நடாத்த முன்வரவில்லை அதனை ஆதரிக்கவும் இல்லை. ஆனால் தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குப் பெறுவதற்காக மக்களை ஏமாற்றுவதற்கு பல வகையான பொய்களை கூறுவார் உறுதியும் அளிப்பார் மேடையை விட்டு இறங்கும் பொழுது கூறியவைகளை மறப்பார். கொடுத்த வாக்குறுதிகளையும் மறப்பார் இப்படிப்பட்டவர்களிடமிருந்து இனத்தைக் காக்க இளைஞர்கள் முன்வரல் வேண்டும். என்று கூறினர்.

பெருந்திரளான இளைஞர்கள் பங்குகொண்ட இக் கூட்டத்தில் மேற்படி வாலிப முன்னணியின் தலைவராக திரு. அ. கணேசலிங்கம் உபதலைவராக ஐ. தனஞ்சியன், செயலாளர் கே. நவரத்தினம் தனாதிகாரியாக திரு. ஆர். மாணிக்கண்டுவம், மற்றும் பதினொருபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# செல்வா தலைமையே சிறந்தது!

"சத்தியமும் நேர்மையும் நிறைந்த தலைவர்களால் மட்டும்தான் ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டம் நிறைவு பெற்றிருக்கிறது. உலக அரங்கில் நடைபெற்ற பல போராட்ட வரலாறுகள் இதனைத் தான் எடுத்தியம்புகின்றன. இந்த வகையில் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசுமினத்திற்கு சுதந்திரம் பெறப் போராடுவதற்கு, சத்தியத்திற்கு கட்டுப்பட்டவராகவும் நேர்மைக்கு உதாரண புருஷராக விளங்குபவராகவும் தியாகத்திற்கு புகழ் பெற்றவராகவும் போற்றப்பட்டு வருகின்ற தமிழரசுக் கட்சித் தந்தை திரு. செல்வநாயகத்தின் தலைமைதான் ஏற்றது. போலித்தனம் நிறைந்த தலைவர்களிடையே தந்தை செல்வா ஒருவர் தான் இன்றுவரை உண்மையாகவும், நேர்மையாகவும் அறவாழ்வு நடாத்தி வருகிறார்."

சாவகச்சேரி தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் கூறினார்.

# விற்பனையாளர் தேவை

இனுவில் பகுதியில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு

சுதந்திரன்

த. பெ. இ. 1183;
கொழும்பு-12.


# மேலும் ஸ்னோவைட் பரிசுகள் பெறுங்கள்

1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை, ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளில் அச்சிடப்பட்டிருப்போர், ஸ்னோ-வைட் விடுகதை போட்டியில், பின்வரும் மாபெரும் பரிசுகளைப் பெற்றுத் தருவார்கள்
1-ம் பரிசு 1500 ரூபாவும், கிளேசியோ குளிர்ப்பெட்டி ஒன்றும்.
2-ம் பரிசு 1000 ரூபாவும், சிங்கர் தையற்பொறி ஒன்றும்.
3-ம் பரிசு 500 ரூபாவும், தங்கப் பவுன் காப்பு இரண்டும்.
12 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெறுமதி உள்ளவை.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு டயா ஷேட் அல்லது ஒரு சாரிப் புடவை உங்களுக்குப் பரிசாகக் கிடைக்கும். விரும்பியதை (நீங்கள் தெரிந்தெடுக்கலாம்). ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களுடன் ஸ்னோ-வைட் இளவரசியின் படத்தையும் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு சிங்கர் தையற் பொறி உங்களுக்குக் கிடைக்கும்; ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்




1-ம் பரிசு: 250 ரூபா. 2-ம் பரிசு: 100 ரூபா.
3 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும்; பி.சி.சி. பரிசுக் குவைப்பெட்டி ஒவ்வொன்று.

மாதந்தோறும் ஆகக் கூடிய பிரவேசப் பத்திரங்களை, ஸ்னோ-வைட் மேலுறைகளுடன் அனுப்பி வைப்பவர்களுக்கு

(ஒரே கடித உறையினுள் வைத்து அனுப்பப்படவேண்டும்).
1-ம் பரிசு: 750 ரூபா. 3 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெருமதியுள்ளவை.

விதிகள்

1. இப்போது, ஸ்னோ-வைட் விடுகதைப் போட்டியிலே பரிசு பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது —பின்னதாகத் தரப்பட்டிருக்கும் பிரவேசப்பத்திரத்திலே கொடுக்கப்பட்டுள்ள எளிதான வினாக்கள் இரண்டுக்கும் விடையளித்தல் வேண்டும். உங்கள் பெயரினையும் முகவரியினையும் எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும், ஒவ்வொன்றும் வெவ்வேறான (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை) 3 சித்திரக் குள்ளர்களின் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைகளைச் சேர்த்து "ஸ்னோ-வைட் விடுகதை, த. பெட்டி, இல. 631, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையினுள் வைத்தனுப்பப்படும் ஸ்னோ-வைட் மேலுறைகளின் தொகையினை, உறையின் பின்புறத்தில எழுதி விடுதல் வேண்டும்.
2. ஆகக் கூடிய ஸ்னோ-வைட் மேலுறைகளுக்கான பரிசுகளைப் பெறுவதற்கு, நீங்கள் அனுப்பும் ஸ்னோ-வைட் மேலுறைகளை வெவ்வேறு ஒரே கடித உறையினுள் வைத்து, உங்கள் பெயர் முகவரி ஆகியவற்றையும் எழுதி, "ஸ்னோ-வைட் மேலுறைகள், த. பெட்டி, இல. 631, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையினுள் வைத்தனுப்பப்படும் ஸ்னோ-வைட் மேலுறைகளின் தொகையினை, உறையின் பின்புறத்தில எழுதிவிடுதல் வேண்டும். பிரவேசப் பத்திரங்களுக்கான முடிவு தேதி மாதந்தோறும் மாத இறுதித் தேதியாகும்.
3. அப்புரவான பிரவேசப்பத்திரங்களுக்கான பரிசுகள், மாதந்தோறும் கிடைக்கப்பெறும் பிரவேசப் பத்திரங்களிலிருந்து, துப்புரவினை மட்டும் நோக்கி, வழங்கப்படும். பிரவேசப் பத்திரங்களுக்கான முடிவு தேதி மாத இறுதித் தேதியாகும்.
4. மாபெரும் பரிசுகளுக்கான பிரவேசப் பத்திரங்கள், விடைகளின் சரிபாட்டினையும்; துப்புரவினையும்

5. 7 சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைத் தொகுதிகளும் (டயா ஷேட் அல்லது சாரிப் புடவை என நீங்களே தெரிவுசெய்தல் வேண்டும்), ஸ்னோ-வைட் இளவரசியையும் 7 சித்திரக் குள்ளர்களையும் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைத் தொகுதிகளும், உங்கள் பெயர் முகவரி ஆகியவற்றுடன் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:- ஸ்னோ-வைட் பரிசுகள்,
ஏ. ஜே. என். செனிவிரத்ன அண்ட் சன்ஸ்,
60, ஆனந்த குமாரசுவாமி வீதி,
கொழும்பு-3.
6. ஸ்னோ-வைட் போட்டிகளில், பி. சி. சி. லிமிற்றெட் தாபனத்திலும்; ஏ. ஜே. என். செனிவிரத்ன, அண்ட் சன்ஸ் தாபனத்திலும் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது குடும்ப உறுப்பினரும் தவிர்த்து இலங்கை வாழ் மக்கள் எவரேயாரும் கலந்து கொள்ளலாம்.
7. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்குவரத்து எதுவும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது
இதோ, ஸ்னோ-வைட் விடுகதைப் போட்டிக்கான பிரவேசப் பத்திரம்-

—வெட்டுக அல்லது படி செய்க—

1. பி.சி.சி. ஸ்னோ-வைட் சோப் நறுமணங் கொண்ட பல காரியார்த்த சோப். ஸ்னோ-வைட் சோப்பினை ஒப்பனைச் சோப்பாக உபயோகிக்கிறீர்களா? (ஆம் அல்லது இல்லை) ......
2. பி.சி.சி. ஸ்னோ-வைட் மேலுறையில் அச்சிடப்பட்டுள்ள சித்திரக் குள்ளர்களுள் தாடியும் கண்ணாடியும் உடையவர் எவர்? இல. ......


பெயர் ......

முகவரி ......

......

தபால் அலுவலகம் ......

இப் பிரவேசப் பத்திரத்துடன், (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக்குள்ளர் வரை உள்ளவர்களுள்) ஒவ்வொன்றும் வெவ்வேறான 3 சித்திரக் குள்ளர்களின் படங்களைக் கொண்ட 3 ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளை வைத்தனுப்புதல் வேண்டும்.



வெண்மைக்கும் பிரகாசத்துக்கும் பி.சி.சி. ஸ்னோ-வைட் பல காரியார்த்த சோப்பினை உபயோகியுங்கள்.

AJNS BCC 244.63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# இன்னும் வரேல்லை

நெல்லை க. பேரன்

கதிரவேலரின் வீடு அன்றைக்கு என்றுமில்லாதபடி மிகவும் கலகலப்பாக இருந்தது. காரணமும் இல்லாமல் இல்லை. அன்றைக்கு அவருடைய இரண்டாவது மகன் வாரித்தம்பி லண்டனில் இருந்து வருகிறான். 'கெமிக்கல் எஞ்சினியரிங்...' பட்டப்படிப்புக்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்றவன் இப்போது ஏதோ லீவு இருக்கிறதென்று சொல்லி இடையில் வருகிறான். பின்பு ஒருமாதத்தில் கடையில் போக வேண்டும் என்றும் லண்டனிலேயே தான் ஏதோ வேலைதேடி வைத்திருப்பதாகவும் கடிதம் எழுதியிருந்தான்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வாரித்தம்பியை வரவேற்கவென்று கதிரவேலர் தனது மூத்த மகன் தவராசாவைக் கொழும்புக்கு அனுப்பியிருந்தார்.

தவராசா எட்டாம் வகுப்போடயே படிப்பை நிறுத்திக் கொண்டு தகப்பனுருடன் உதவியாகத் தோட்டத்தில் இறங்கிவிட்டான். கணக்குப் பாடம் அவனுக்குச் சென்மத்து விரோதி. அதனால் சிறு வயதிலேயே ஆசிரியர்களிடம் குட்டு வாங்கி வாங்கிப் பிடரி பெருத்துவிட்டிருந்தது. போதாக்குறைக்கு எட்டாம் வகுப்பில் ஏரம்பு வாத்தியார் வேறு கணக்குப் பாடம் எடுத்து அவனை நிலைகுலையச் செய்து விட்டார். கையில் பிரம்போடு அவர் வகுப்பில் இறங்கி விட்டார் என்றால் மாணவர்கள் பாடு கெடிக் கலக்கம் தான். முதலிலிருந்து பதினாரும் பாய்ப்பாடுவரைக்கும் மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என்று தலைகீழாகச் சொல்லும்படி கேட்பார். சிறு பிழையென்றாலும் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரைசகும் பிரம்பினால் அர்ச்சனை செய்வார். அவருடைய பயத்தினால் தான் தவராசா பள்ளிக்கூடம் போகாமல் விட்டவன் என்பதும் ஒரு சிறு உண்மை.

தவராசா கொழும்புக்குப் புதிது. ஆகவே தனது ஊரைச் சேர்ந்த நண்பன் சிவலிங்கத்திற்குக் கடிதம் எழுதிக் கோட்டைப் புகையிரத நிலையத்தில் அவனுக்காகக் காத்திருக்கும்படி கேட்டிருந்தான். சிவலிங்கம் கொழும்பில் போஸ்ட் மாஸ்டர் பரீட்சையில் சித்திபெய்தி இப்போதுதான் வேலைக்கு வந்தவன் என்றாலும் இடங்களை ஓரளவு தெரிந்து வைத்திருந்தான். ஆகவே வெள்ளவத்தையிலுள்ள தனது குடியிருப்பில் இருந்து அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு ஆயத்தமாக வந்து நின்றான். எழுந்த நேரத்திலேயே குளிக்காவிட்டால் அப்புறம் குளிப்பதே அவனுக்குக் கஷ்டமாக இருக்கும். ஏனென்றால் அவன் அன்றைக்குக் கந்தோருக்குப் போகவேண்டி இருந்தது.

சிவலிங்கம் தவராசாவைக் கூட்டிக் கொண்டு முதலில் தனது குடியிருப்புக்குச் சென்றான்.

வெள்ளவத்தையில் ஒரு சிறிய அறையில் ஐந்து கட்டில்கள் போடப்பட்டிருந்த விதம் தவராசாவுக்குத் தனது ஊருக்குக் கிட்டவுள்ள மந்திகை அரசினர் வைத்தியசாலையின் காயக்காரர் வார்ட்டை ஞாபகப் படுத்தியது.

'என்னடாப்பா...இதேதன்னுடை இடம்...' என்று வியப்புடன் கேட்டான். 'வேறு என்ன செய்கிறது? எண்பது ரூபா அடிப்படைச் சம்பளத்தோட மத்தியதர வர்க்க ஊழியர்களாக இருக்கிற நாங்கள் இப்பிடித்தான் சீவிக்க வேணும்... உன்னைப்போல ஊரிலே உல்லாசமாக இருக்க முடியுமே... நீ என்றால் ஊரிலை நல்ல வெளியான இடங்களிலை ஓடியாடித் திரிகிறாய்... தோட்டத்திலை வேலை செய்கிறாய்...வீட்டிலை அம்மாவின்ரை கையாலை சாப்பாடு... கோயிலடியிலை போய் கிளித்தட்டு விளையாடுகிறாய்... இங்கை நாங்கள் வெளிக்கிட்டு உலாவ அறைக்குள்ளை இடமில்லை. கிளித்தட்டும் விளையாட ஏலாது. அப்பிடியெண்டால் கோல்பேஸ் மைதானத்துக்குத் தான் போகவேண்டும்...'

'அப்ப உன்னிலும் பார்க்க எங்கட சீவியம் திறம் என்று சொல்லுகிறாய்...'

'உண்மைதான் தவராசா... சரி சரி... இப்ப அனேகமா எல்லாரும் குளிச்சிட்டாங்கள்—நீயும் போய்க் குளி: காலமை பதினொரு மணிக்குத்தானே பிளேன் வாறது... நானும் லீவு போட்டிட்டு வாறன். ஒன்பது மணிபோல இங்கிருந்து புறப்படுவம்...'

சிவலிங்கம் தனது அறையில் ஒரு சிறிய மேசையின் மேலிருந்த பற்பொடியை எடுத்துத் தவராசாவிடம் கொடுத்துப் 'பாத்றூம்'க்கு அனுப்பினான்.

சரியாக ஒன்பது மணிக்குப் பெற்றா பஸ் ஸ்டாண்டில் இருந்து கட்டுநாயக்காவுக்குப் புறப்பட்டுவிட்டார்கள். வத்தளை ஹெந்தலை எல்லாம் தாண்டிப் பஸ் ஓடிக்கொண்டிருந்தது. வத்தளையில் தெருவோரமாக மாளிகைபோல விருந்த அந்தக் கப்பல் வீட்டைப் பார்த்துத் தவராசா அதிசயப்பட்டான். "ஆரோ மகாராசாக்களுடைய வீடு போல இருக்கே" என்று தனது அதிசயத்தைச் சிவலிங்கத்துடன் பகிர்ந்து கொண்டான்.

பஸ் ஜா-எலையைத் தாண்டும்போது சிவலிங்கம் சொன்னான் 'இங்கை தான் எங்கடை கந்தசாமியின்ரை மகன் இரத்தினம் காணி வாங்கியிருக்கிறான். நல்ல அருமையான இடம். கைத்தொழிற் பிரதேசம்...'

'இரத்தினம் இங்கை என்ன செய்கிறான்?' தவராசா கேட்டான்.

'எமது வினைஞராகத்தான் இருக்கிறான்: கொழும்பிலை வாடகை குடுத்து இருக்கக் கூடாது என்றுவிட்டு இப்ப காணியே வாங்கிவிட்டான். அவன் ஆள் நல்ல பிரயாகி... தப்பிவிடுவான்...'

'முந்தி ஏழாம் வகுப்பில் என்னோடை படிச்சவன்... சரியான கெட்டிக்காரன்—கொஞ்சம் முகப்பாத்திக் கட்டை...'

பஸ் நேரே கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குப் போகிற பஸ் ஆதலினால் சரியாக பத்தரை மணிக்கெல்லாம் விமான நிலையத்தை வந்தடைந்தது.

ஆசியாவிலேயே குறிப்பிடத்தகுந்த வெளிநாட்டு விமானங்கள் அதிகமாக வருகின்ற விமானத்தளமான கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பிரமாண்டமான கட்டிடங்கள் தவராசாவைப் பிரமிக்கவைத்தன. சிவலிங்கமும் அன்றுதான் முதன் முதலாக அங்கு விஜயஞ் செய்திருந்தான்.

கப்பல் போன்ற மிக நீளமான அந்த பீ. ஏ. ஓ. சி. விமானத்திலிருந்து வாரித்தம்பி இறங்கிக் கொண்டிருந்தான். முகத்தில் கறுப்புக்குளிர் கண்ணாடி அணிந்து கோட் சூட்டுடன் கையில் ஒரு ஜெம்ஸ்பொண்ட்பாணி சிறிய சூட்கேசுடன் வாரித்தம்பி இறங்கிக்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து வெள்ளைக்கார மாது ஒருத்தியும் மிக எளிமையாக ஏதோ பேசிச் சிரித்தவாறே இறங்கிக் கொண்டிருந்தாள்.

சுங்கப் பரிசோதனைகள் முடிந்து வெளியே வந்த பிறகுதான் வாரித் தம்பி தனது தமையன் தவராசவுடனும், சிவலிங்கத்துடனும், ஆறுதலாக நின்று பேசமுடிந்தது. அந்த ஆங்கிலேயப் பெண்மணியும் அவனுடனேயே கூட நின்று சிரித்துக்கொண்டிருந்தாள்.

''மீட் மை பிறதர் தவா... அன்ட் மை பிரண்ட் சிவா.'' என்று சொல்லி வாரித்தம்பி அவளுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தான். அவள் திடீரென்று தவராசாவின் கையைப் பிடித்துக் குலுக்கினாள்.

தவராசா மிகவும் சங்கோஜப்பட்டான்.

சிவலிங்கம் ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

''லண்டனில் என்னுடன் கூடப் படிக்கிறவர். அவவே தான் வசிக்கிறார். இப்போது எங்கள் இலங்கை நாட்டின் அழகு வளத்தைப் பார்க்கவென வந்திருக்கிறார்'' என்று சொல்லி மிஸ் கரோல்ட்டை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் வாரித்தம்பி.

வாரித்தம்பியின் கையிலே ஒரு சிகரெட்டின் வாயிலும் ஒன்று புகைந்துகொண்டிருந்தது. ''இன்றைக்கே மத்தியானம் யாழ்தேவியில் ஊருக்குப் புறப்படவேண்டும்'' என்று தவராசா சொன்னான்.

''நோ... நோ... முதலில் நாங்கள் 'சிலின் ஹோட்டலில்' றூம் எடுத்து ரு வீக்ஸ் தங்கப் போறம். அப்புறம் கண்டி, நுவரெலியா, மஸ்கெலியா என்று மலைநாடெல்லாம் சுற்றி சிலோனின் பியூட்டியை எல்லாம் மிஸ் கரோல்ட்டுக்குக் காண்பித்துவிட்டுத் தான் மறுவேலை. என்னாலை இப்பவே ஊருக்கு வரமுடியாது''

''இல்லைத் தம்பி...அங்கை வீட்டிலை எல்லோரும் உனக்காக எதிர்பார்த்துக்கிட்டிருக்கினம். ஐயா கூட உன்னைப் பிளேனாலை உடனே கூட்டிவரும்படிதான் என்னிடம் சொல்லிவிட்டவர். இன்றைக்கு இரவைக்கே நாங்கள் போகாவிட்டால் அவை பெரிசாகக் கவலைப் படுவினம்''.

'நோ... நோ... இட் இஸ் நொட் வண்ஸ் நோ செக் சண்ட் வெண்ட்... என்னாலை திரும்பவும் சொல்ல முடியாது. வாரித்தம்பியின் வாயில் ஆங்கிலம் தூள் பறந்தது.

சிவலிங்கத்தின் பாடு ஒரே எக்கச் சக்கமாகப் போய் விட்டது. யாருக்காகக் கதைப்பது என்று தெரியாமல் திண்டாடினான் அவர்கள் ஏறிய டாக்ஸியை முதலில் சிலின்கோ ஹோட்டலுக்கு விடும்படி வாரித்தம்பி கட்டளையிட்டான், தான் இனிமேல் எதுவும் சொல்லிப் பிரயோசனமில்லை என்று தவராசா எண்ணிக் கொண்டான்.

தானும் தகப்பனும் மண்ணைக் கிண்டிக் கஷ்டப்பட்டுப் பணத்தைச் சேர்த்து அனுப்பத் 'தம்பி லண்டனில் படித்து விட்டு இப்பயாரோ ஒரு அசட்டுக் காறியையும் கூட்டிக் கொண்டு வந்து ஊருக்கு வர மறுக்கிறானே.' என்று தவராசா மனம் புழுங்கினான். கதிரவேலர்? இதுகளை அறிஞ்சால் எவ்வளவு கவலைப்படுவர்? அவர் தான் பட்ட கடன்களையெல்லாம் மகன் சீமையாலே வந்த பிறகு சீதனம் வாங்கி அடைச்சுப் போடலாம் என்று மனப் பால் குடித்துக் கொண்டிருக்கிறார்—இப்பவே அவனுக்கு நாலைந்து பெரிய இடங்களிலே இருந்து கலியாணப் பேச்சு வந்திருக்கினம். இதுகளை எண்ணிப் பாராமல் இவன் இப்பிடித்தான் தோன்றித் தனமாக நடந்தால்... இதென்னடா... இதுதான் ஒருவேளை லண்டன் படிப்போ?... இல்லாட்டில் லண்டனுக்குப் போகிற எல்லாரும் இப்பிடித்தான் இருப்பாங்களோ? அடபாவமே.. நல்லசீமைதான்..' என்று தவராசா கவலைப் பட்டான்.

குளுகுளு வென்று குளிர் மையூட்டப்பட்ட சிலின்கோ ஹோட்டல் அறையொன்றில் பளபளக்கும் மாபிள் பாத்றூமுக்குள் சலோலைட் நீர்த் தொட்டியில் வெள்ளிப் பிடி போட்ட சுடுதண்ணீர்ப் பைப்பை வாரித்தம்பி முறுக்கிவிட்டுக் குளித்துக் கொண்டிருந்தான்' அதன் வெம்மை அவன் உடலுக்கு மிகவும் உகந்ததாக இருந்தது 'அப்பாடா என்ன சுகம்?—இதை விட்டுப் போட்டு அந்தப் புழுதிமண் ஊருக்கு வரும்படி சொன்னானே அண்ணன்... அவனைப் பிரதர் என்று சொல்லவே வெட்கமாயிருக்கு... வேட்டியும் ஆளும்...சுத்தப் பட்டிக்காடு...' என்று வாய்விட்டே சொன்னார் மிஸ்டர் வாரித்தம்பி மிஸ் கரோல்ட்டின் பணத்தில் அவன் குளித்துக் கொண்டிருந்தான். மிஸ் கரோல்ட்டும் தானும் காதலர்கள் என்பது இந்தச்சனத்துக்கு எங்கே தெரியப் போகிறது? என்று அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்'

வெறுங்கையோடு ஊருக்குத் திரும்பிய தவராசாவைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

ஏன் தம்பி அவன் வரேல்லையே? என்று வலு ஆதங்கத்துடனும் ஆவலுடனும் கேட்ட கதிரவேலரிடம் தவராசா சொன்ன பதில் இதுதான்

'வாரித்தம்பி இன்னும் சிலோனுக்கு வரேல்லை.'

(யாவும் கற்பனை)

---

## கர்ப்பக் கிருகம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

படித்திருக்கின்றேன். பெண்கள் பலரை வழக்குகளில் சந்தித்திருக்கின்றேன். நீ உலகத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பாய். ஆசிரியை அல்லவா. ஆகவே சுகுணா பற்றி நீ கூறிய உடனேயே என் மனதிலும் ஓர்... அதை எப்படி உன்னிடம் கூறுவ தென்றே புரியவில்லை. புனிதம், அந்தப் பெண் படித்திருக்கவேண்டும் என்றோ வேண்டாத நாகரீக மோகத்தில் தன் காலத்தைப் போக்கடித்திருக்கவேண்டும் என்றோ நான் விரும்பவில்லை. குடும்பம் நடத்தக்கூடிய அறிவும், என்னுடன் இலவறவாழ்வில் ஒத்துழைக்கக் கூடியவளாகவும், ஒழுக்கமுடையவளாகவும் இருந்தால் அதுவே போதும்' என்றான்.

'அண்ணை நீங்கள் பலே ஆள்தான்' என்றாள்.

'புனிதம் இந்தக்கால உலகம்பற்றி நல்லதையும், பொல்லாததையும் நீ அறிந்திருப்பாய். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் வழக்குக் கென்று வருபவர்களிடம் நான் காண்பது பொய்யும், புரட்டும், பித்தலாட்டமுமே. ஒழுக்கமுள்ளவன் என்று கணிக்கக்கூடிய எவனுமே வரவில்லை.'

'கோட்டுக்கு வருபவர்கள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள் தானண்ணை. அதுவும் நீங்கள் கிரிமினல.'

'புனிதம் கோட்டுக்கு வருபவர்கள் மட்டுமல்ல; என்னுடன் படித்த ஒரு நண்பன் அவன்கூட குற்றமயம் இருபவேல்தான் வேலை செய்கிறான். அவன் கூறிய கதையைக் கேட்டால்...என்ன உலகம் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.'

'என்னண்ணை கூறுகின்றீர்கள்? எனக்கு எதுவுமே புரியவில்லையே.'

'உனக்குப் புரியாது புனிதம். நீ ஒரு அக்காவோடு கூடிப் பிறந்திருந்தால் சிலவேளை புரிந்து கொண்டிருப்பாய்.'

'ஒரு அக்காளோடடா?'

'இல்லை உனக்கு மூத்த அக்காள் சிலபேர் இருந்து அவர்கள் மணம் முடித்த பின்பு, நீயும் ஒரு கன்னிப் பெண்ணாக அவர்களோடு வசித்திருந்தால் உனக்கும் ஒருவேளை நான் சொல்வது புரிந்திருக்கும்.' என்று கூறிய அண்ணனை பொருள் புரிந்த பார்வையுடன் நோக்கினாள்.

'புனிதம் வந்து தான்...'

'ஸ்ரொப் பிளீஸ்' என்று கர்ஜித்தான் புனிதம். திகைப்புற்றாள் பாமா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தீபாவளி வெளியீடு



சிவாஜி பத்மினி கே. ஆர் விஜயா
நடிக்கும்

# பாலாடை

# 2-வது வெற்றி வாரம்

இங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நாகேஷ், பத்மினி, பாலையா,
ரவிச்சந்திரன், குமாரிசச்சு, கருணாநிதி,
சுந்தரிபாய், சகஸ்ரநாமம்

—நடிக்கும்—

# எங்களுக்கும் காலம் வரும்

அகத்தின் அழகைப்போல் படத்தின்தரம் விளங்கும்

## 4-வது வெற்றி வாரமாக காட்சியளிக்கிறது



அன்று போராட்டத்தில் அவனை எதிர்தது சென்றது ஒரு முகம் பின்பு பிரமச்சாரியான வழக்கறிஞரின் பிரமச்சாரியத்தையே ஆட்டம் காணவைத்தது ஒரு முகம். சிறை சென்று வந்த பின்பு சந்தித்தது ஒரு முகம்.

செல்லமகால் (கொழும்பு) | நெல்சன் (திருமலை) | வின்சர் (யாழ்ப்பாணம்)

ரவிச்சந்திரன் ஜெயலலிதா அசோகன் சுந்தரராஜன் —நடித்த—

# அன்று கண்ட முகம்

## 9-வது வாரமாக காட்சியளிக்கிறது கெயிட்டியில்

எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா —நடித்த— புதிய பூமி

# எமது அடுத்த வெளியீடு

சென்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) மற்றும் என்ட்டெயின்மென்ட் திரைகளில்

★ ★ ★

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன்,
சோ, சந்திரபாபு, பண்டரிபாய், ஜோதிலட்சுமி,
ராஜஸ்ரீ, மனோகர் —நடித்த—

* புரட்சி நடிகரின் *

# அடிமைப் பெண்

(இஸ்ட்மன் கலர்)

கதை, வசனம்: எம். ஜி. ஆர். டைரக்ஷன்: சங்கர் இசை கே. வி. மகாதேவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ... டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் ஆக்டோபர் மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 2341